REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஒக்டோபர் 2 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 233 | Monday 02, October, 2023 | 20பக்கங்கள் | 50/-

ஜேர்மனுக்கு சென்றிருந்த ஜனாதிபதி ரணில் நாடு திரும்பினார்

ஜேர்மனுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று காலை நாடு திரும்பியுள்ளார். தற்கால உலக அரசியல் மற்றும் 06

பருவகாலத்தில் மட்டுமே சிவனொளிபாத மலைக்கு செல்வதற்கு அனுமதி

பருவகாலத்தில் மட்டுமே சிவனொளிபாத மலைக்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதியின்றி பருவகாலம் இல்லாத காலப் பகுதியில் சிவனொளிபாத மலைக்கு செல்வது தடைசெய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட (30) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை குறிப்பிட்டுள்ளார். அனுமதியின்றி பருவகாலம் 06

O/L, A/L முடித்த மாணவருக்கு தொழிற்பயிற்சி நெறிகள்

உடனடியாக ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி – சுசில்

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகள் நிறைவடைந்தவுடன் அந்த மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி நெறிகளை உடனடியாக ஆரம்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கிந்தோட்டை பகுதியில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இதன்படி உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்காக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள தொழில் சார் பயிற்சி நெறிகள், உயர்தரப் பரீட்சைக்குப் பின்னர் நாடளாவிய ரீதியில் 06

மாலைதீவின் புதிய ஜனாதிபதிக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்து

இரு நாட்டு உறவுகள் குறித்தும் உரையாடினார்

லோரன்ஸ் செல்வநாயகம்

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள மொஹமட் முயிசூவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

மொஹமட் முயிசூவுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மாலைதீவு மக்களின் மேம்பாட்டிற்காக இரு நாடுகளுக்குமிடையில் காணப்படும் 06

இலங்கைக்கான IMF கடன் ஒத்துழைப்பு; இரண்டாம் தவணைக்கான நிதியை விடுவிக்க இவ்வாரம் இணக்கப்பாடு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்புத் திட்டத்தின் இரண்டாவது தவணையை விடுவிப்பது தொடர்பான அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடு இந்த வாரத்தில் முன்னெடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான கடன் ஒத்துழைப்புக்கு பொறுப்பான பிரதானி பீட்டர் ப்ரூவர் தலைமையிலான தூதுக்குழு செப்டம்பர் 14ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை

இலங்கையில் தங்கியிருந்து இலங்கைப் பிரதிநிதிகளுடன் பல மட்ட பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது.

அந்தப் பேச்சுவார்த்தைகளுக்கிடையில் இணக்கப்பாடு எட்டப்படாததால் இந்த வாரத்தில் அந்த இணக்கப்பாடு எட்டப்படும் என்றும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்தல், வரி மறுசீரமைப்பு, வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு, நல்லாட்சியை ஏற்படுத்துதல், பொருளாதார மற்றும் சமூகம் தொடர்பான முக்கிய விடயங்கள் இந்த இருதரப்பு அதிகாரிகள் பங்கேற்ற பேச்சுவார்த்தைகளில் உள்ளடக்கப்பட்டன.

அதற்கிணங்க அந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதுடன் அத்துடன் அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடும் முன்னெடுக்கப்படும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அவ்வாறு அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர் தூதுக்குழு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சபைக்கு இலங்கைக்கு வழங்குவதற்கான இரண்டாவது தவணையை விடுவிப்பது தொடர்பில் பரிந்துரைகளை முன்வைக்கவுள்ளது.

சர்வதேச நாணய நிதியமானது இலங்கைக்கு கடன் ஒத்துழைப்பு மூலம் 2.9 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்கத் தீர்மானித்துள்ளதுடன், அதில் 333 மில்லியன் அமெரிக்க டொலரை முதலாவது தவணையாக வழங்கியுள்ளது. 06

இந்திய கைத்தொழில் அமைச்சருடன் உயர்ஸ்தானிகர் மொரகொட சந்திப்பு

இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் ஸ்ரீ பியூஷ் கோயலை (29) புது தில்லியில் உள்ள வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சில் 06

03 சுங்கத்திணைக்களத்திற்கு புதிதாக 138 உதவி சுங்க அத்தியட்சகர்கள் நியமனம்

விண்ணப்பங்கள் பரீட்சைகள் திணைக்கள இணையதளத்தில்

நீதிபதி சரவணராஜா பதவி விலகல் குறித்து

பொலிஸார் மற்றும் CIDயினர் இணைந்து விசாரணைகள் ஆரம்பம்

சட்டம் ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு

நீதிபதி சரவணராஜா குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டமை சம்பந்தமாக விசாரணைகள் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக, 06

8 மாவட்டங்களின் 30 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை

சீரற்ற காலநிலையால் சுமார் 5,000 பேர் வரை பாதிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



கடும் மழையுடனான சீரற்ற காலநிலையையடுத்து நாட்டில் எட்டு மாவட்டங்களை சேர்ந்த 30 பிரதேச செயலாளர் பிரிவுகள் மண் சரிவு அபாய எச்சரிக்கை பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது .

இரத்தினபுரி, மாத்தறை, கேகாலை, களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டை, கண்டி உள்ளிட்ட 8 மாவட்டங்களின் 06

அங்கம்பிட்டிய கிராமிய வங்கியில்

6 கோடி ரூபா பெறுமதியான அடகு வைத்த தங்க நகைகள் கொள்ளை

பொலிசார் தீவிர விசாரணை

லோரன்ஸ் செல்வநாயகம்

வென்னப்புவ, அங்கம்பிட்டிய கிராமிய வங்கியில் ஆறு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியைக் கொண்ட அடகு வைக்கப்பட்ட நகைகள் கொள்ளையர்களால் திருடப்பட்டுள்ளன. கடந்த 27ஆம் திகதி இந்த திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளதுடன் அன்றைய தினம் பிற்பகல் 1:45 மணியளவில் வங்கி மூடப்பட்ட பின்னர் திருடர்கள் பிரவேசித்து தமது கைவரிசையை காட்டியுள்ளதாகவும் மறுநாள் காலை 8:30 மணிக்கு வங்கியின் கதவை திறந்த போதே அந்த திருட்டு தொடர்பில் தெரிய வந்ததாகவும் வங்கியின் முகாமையாளர் வென்னப்புவ பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார். 06

ஒரு தடவை மட்டுமே பயன்படுத்தும்

பிளாஸ்டிக் பொருட்களுக்கு நேற்று முதல் தடை

நாட்டில் ஒரு முறை மற்றும் குறுங்கால தேவைகளுக்காக மாத்திரம் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள் நேற்று முதல் தடை செய்யப்பட்டுள்ளன. இதன்படி, குறித்த பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதித்து வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் இன்று முதல் அமுலுக்கு வரவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை அறிவித்துள்ளது. இந்த வர்த்தமானி 06

கிரிக்கெட் வளர்ச்சிக்கு மூவர் அடங்கிய ஒருங்கிணைப்புக் குழு

விளையாட்டுத்துறை அமைச்சினால் நியமனம்

இலங்கையில் கிரிக்கெட்டின் வளர்ச்சி, சுதந்திரம் மற்றும் வெளிப்படைத்தன்மையைப் பாதுகாப்பதற்காக மூன்று பேர் அடங்கிய ஒருங்கிணைப்புக் குழுவை விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நியமித்துள்ளார்.

முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரரும் கிரிக்கெட் இடைக்கால குழுத் தலைவருமான சிதத் வெத்தமுனி, ஸ்ரீ லங்கா கிரிக்கெட்டின் முன்னாள் தலைவர் உபாலி தர்மதாச 06

மக்கள் எவரும் அச்சமடையத் தேவையில்லை

'நிபா' வைரஸின் தாக்கம்; நாட்டில் பரவ வாய்ப்பில்லை

சுகாதார அமைச்சு அறிக்கை மூலம் தெரிவிப்பு

இலங்கையில் நிபா வைரஸ் பாதிப்பு அதிகம் இல்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்திய மாநிலமான கேரளாவில் இதுவரை 06 நிபா வைரஸ் நோயாளிகள் மட்டுமே பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 06

எரிபொருள் விலைச் சூத்திர நடைமுறை;

அக்டோபர் மாதத்திற்கான திருத்த அறிவிப்பு இன்று

நள்ளிரவு முதல் மேற்கொள்ளத் தீர்மானம்

விலை சூத்திரத்தின் பிரகாரம், இந்த மாதத்திற்கான எரிபொருள் விலை திருத்தம் இன்று (02) நள்ளிரவு முதல் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த விலை திருத்தம் இன்று இரவு அறிவிக்கப்படவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. விலைச் சூத்திரத்தின் படி, ஒவ்வொரு மாதமும் முதல் நாள் எரிபொருள் விலையில் திருத்தம் 06

கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட ஏழு அடி நீளமான முதலை

திருகோணமலை மாவட்ட கந்தளாய் சூரியபுர பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ஒன்பதாம் கட்டை பகுதியில் பாழடைந்த கிணற்றிலிருந்து முதலையொன்று கந்தளாய் வன விலங்கு அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது. 06

மலேசியாவில் மூவர் படுகொலை சம்பவம்;

கைதான இலங்கையர்கள் இருவருக்கும் விளக்கமறியல்

அக். 06வரை நீடித்து நீதிமன்று உத்தரவு

மலேசியாவில் மூவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரு இலங்கையர்களையும் அக்டோபர் 06வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மலேசியாவில் வீடொன்றில் 06

சமையல் எரிவாயு விலைகளில் திருத்தம்

எதிர்வரும் 4ம் திகதி மேற்கொள்ள முடிவு

லோரன்ஸ் செல்வநாயகம்

சமையல் எரிவாயுவின் விலைகளில் திருத்தங்களை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. அந்த வகையில் அக்டோபர் மாதத்திற்கான சமையல் எரிவாயு விலை திருத்தங்களை எதிர்வரும் 4ஆம் திகதி மேற்கொள்ளவுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. கடந்த மாதத்தில் லிற்றோ கேஸ் 06

தென்மேற்கு பகுதியில் நிலவும் மழை மேலும் தொடரும்

நாட்டின் தென்மேற்கு பகுதியில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இன்றையதினம் (02) மேல், சப்ரகமுவ, தெற்கு, வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடியசாத்தியம் காணப்படுகின்றது. மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, புத்தளம் மாவட்டங்களிலும் சில பகுதி 06

நகர்வலம்

கொள்ளுப்பிட்டி ஜும்ஆ பள்ளிவாசலில் மீலாத் தின முக்கிய நிகழ்வு

பிரதம அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன பங்கேற்பு

(அஷ்ரப் ஏ சமத்)

கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசல் ஒழுங்கு செய்த மீலாத் தின நிகழ்வு பள்ளிவாசலின் தலைவர் முஸ்லிம் சலாஹுத்தீன் தலைமையில் (28) பள்ளிவாசலில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் வாழும் மூவினவறிய 3000 குடும்பங்களுக்கு தலா 3000 ரூபா பெறுமதியான 3000 உணவுப்பார்சல்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதோடு பாடசாலை மாணவர்களுக்கும் இந்நிகழ்வின்போது பிரதமரினால் பரிசுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இங்கு உரையாற்றிய பிரதமர், இன்றைய தினம் நபி முஹம்மத் (ஸல்)

அவர்கள் பிறந்த தினத்தில் கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல் நிகழ்வில் கலந்து கொள்ள கிடைத்தமை பெரும் பாக்கியமாக கருதுகிறேன்.

இப்பள்ளிவாசல் முன்னாள் தலைவர் காலஞ்சென்ற கலீல் ஹாஜியார் இப் பள்ளிவாசலின் சொத்துப் பிரச்சினை சம்பந்தமாக என்னை அடிக்கடி சந்தித்து உரையாடியுள்ளார். அப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு முயற்சிப்பதாகவும் பிரதமர் இதன்போது கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம் பௌசி , யதாமின் குணவர்த்தன உட்பட முன்னாள் தூதுவர்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

தென் மாகாண தமிழ் மொழித்தின போட்டிகளில்

ஹம்பாந்தோட்டை ஸாஹிரா முதலிடம் பெற்று சாதனை

பாடசாலை சமூகம் பாராட்டு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

அகில இலங்கை தமிழ் மொழித்தின தென் மாகாண போட்டிகளில் ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய கல்லூரி ஆறு முதல் இடங்களைப்பெற்று தென் மாகாணத்தில் அதிக முதல் இடம் பெற்ற பாடசாலையாக திகழ்வதாக தென் மாகாண கல்வித் திணைக்கள தமிழ் மொழிப் பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். ஏ. எம். மஷாயிர் நேற்று (01) தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை ஸாஹிரா கல்லூரி மாணவர்கள் ஆறு முதல் இடங்கள், இரண்டு இரண்டாம் இடங்கள் மற்றும் ஐந்து மூன்றாம் இடங்களை பெற்று மொத்தம் 13 நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டியுள்ளனர். வெலிகம அறபா தேசிய பாடசாலை ஐந்து முதல் இடங்களைப் பெற்று இரண்டாம் இடத்தினையும் காலி சரஸ்வதி தமிழ் வித்தியாலயம் மூன்று முதல் இடங்கள்,நான்கு இரண்டாம் இடங்கள் மற்றும் நான்கு மூன்றாம் இடங்களைபெற்று மொத்தம் 11 நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டி மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளது.

தென் மாகாணபோட்டிகளில் முதலாவது இடங்களினை பெற்ற மாணவர்கள் அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். ஏ. எம். மஷாயிர் மேலும் தெரிவித்தார்.

இ.போ.ச பஸ் நடத்துனரை தாக்கிய இருவர் கைது

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

அநுராதபுரத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இ.போ.ச பஸ் நடத்துனரை தாக்கிய சந்தேகத்தின் பெயரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என கெக்கிராவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். அநுராதபுரத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பயணிகள் பஸ் கெக்கிராவ பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, அங்கு வந்த இருவர் பஸ்ஸை நிறுத்தி நடத்துனர் மீது தாக்குதலை மேற்கொண்டதுடன், அவர் வைத்திருந்த பயணச்சீட்டு இயந்திரத்தையும் பறித்தெடுத்து கீழே அடித்து நொறுக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவ இடத்திற்கு வருகை தந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேக நபர்களை கைது செய்ய முயற்சி செய்த போதும் சந்தேக நபர் அங்கிருந்து கெக்கிராவ பொது விளையாட்டு மைதானத்தை நோக்கி தப்பியோடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும், சந்தேகநபர்கள் இருவரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கலாநிதி ஜனகன் அவர்களின் எண்ணக் கருவில் உருவான 'ஜனனம் அறக்கட்டளையின் கல்விக்கு கரம் கொடுப்போம்' செயற்திட்டதின் ஊடாக இம்முறை தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு (30) கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்தா கல்லூரி மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றபோது...

சர்வதேச சிறுவர் தினத்தில் கடற்கரை பூங்கா திறப்பு

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பாணந்துறை நகர்ப்புற கடற்கரையில் அமைந்துள்ள கடற்கரை சிறுவர் பூங்கா சிறுவர்களின் பாவனைக்காக நேற்று (01) ஞாயிற்றுக்கிழமை வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

பாணந்துறை நகர கடற்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த சிறுவர் பூங்கா ஸ்ரீலங்கா ஆமை பாதுகாப்புத் திட்டத்தின் அனுசரணையில் புனரமைப்பு செய்யப்பட்டு பாணந்துறை நகர சபையிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. இந்த சிறுவர் பூங்கா கடந்த காலங்களில் பராமரிப்பின்றி கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டமை தொடர்பில் ஊடகங்களில் சுட்டிக் காட்டப்பட்டமை குறிப்படத்தக்கது. ஸ்ரீலங்கா ஆமை பாதுகாப்பு திட்டத்தின் அதிகாரி துஷான் ஹப்புருசிங்க மற்றும் பாணந்துறை நகர சபை செயலாளர் மானெல் சியம்பலாகொட தலைமையில் சர்வதேச சிறுவர் தின சிறப்பு நிகழ்வாக சிறுவர்களின் பாவனைக்காக பூங்கா நேற்று கையளிக்கப்பட்டது. சிறுவர்களின் பங்களிப்புடன் கடற்கரை சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

குவைத் நாட்டின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட

அநு./ புதுக்குளம் மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசல் கட்டட திறப்பு விழா

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் மத்திய நுவரகம் பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட புதுக்குளம் மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாயல் புதிய கட்டட திறப்பு விழா சனிக்கிழமை (30) மிக விமர்சையாக நடைபெற்றது.

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் அல்ஹிமா இஸ்லாமிய அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.நூருல்லாஹ் (நளீமி) இடம் விடுத்தவேண்டுகோளின் பேரில் குறித்த பள்ளிவாயல் குவைத் நாட்டு நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான், அல்ஹிமா இஸ்லாமிய சேவைகள் அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.நூருல்லாஹ் (நளீமி) ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக பரசன்கஸ்வெவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம். அன்வர்தீன் , கம்பிரிகஸ்வெவ மனாருல் உலூம் மகா வித்தியாலய அதிபர் ஜே.ஏ.ஆசாத் மொஹமட் , மத்திய நுவரகம் பிரதேச சபை முன்னால் எதிர்கட்சி தலைவர் ஜே.ஏ.முசாதிக் உட்பட பிரமுகர்கள் பலரும் . ஏராளமான பொது மக்களும் கலந்து கொண்டதுடன், அதிதிகளுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

களுத்துறை 'சிறகு ஒன்றியத்தின்' ஏற்பாட்டில் மென்பந்து கிரிக்கட்

களுத்துறை மாவட்டத்தின் பெருந்தோட்ட தமிழ் மக்கள் சமூகத்தை சார்ந்த மாணவர்களை விளையாட்டுத் துறையில் சாதனையாளர்களாக உருவாக்கும் நோக்கத்தில் 'களுத்துறை சிறகு ஒன்றியத்தின்' சிறகு ஸ்போர்ட்ஸ் அகடமியின் முயற்சியில் களுத்துறை மற்றும் மத்துகம கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பத்து பெருந்தோட்ட தமிழ் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் விளையாட்டுத்திறனை கண்டறிவதற்கான மென்பந்து கிரிக்கெட் சுற்று போட்டியொன்று கடந்த (24) யட்டதொல எல்.ஜி .

லியனாராச்சி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஜனாதிபதியின் விசேட ஒருங்கிணைப்பாளர் சஜன சூரிய ஆரச்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதியின் தொழிற் சங்க உறுப்பினர்களில் ஒருவரான சுப்பையா ஆனந்தகுமார், மற்றும் மேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சிரிசோம லொகுவிதாரன ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக களுத்துறை சிறகு ஒன்றியத்தின் போசகர்களும் களுத்துறை மற்றும் மத்தும கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பெருந்தோட்ட தமிழ் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்ததோடு பத்து பாடசாலைகள் கலந்து கொண்ட இந்த போட்டி தொடரில் அரப்பலகந்த பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தின் மாணவர்கள் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

சீனன்கோட்டை சமகிபுர யாகூத்தியா ஜும்ஆ பள்ளிவாசலில் முப்பதாவது வருடமாக நடைபெற்ற மீலாத் விழாவின் போது பேருவளை மருதானை அப்ரார் ஜும்ஆ பள்ளிவாசல் இமாம் அல் ஹாபிழ் மௌலவி எம் எம் அஹமத் ரிபாய் ஜமாலி (பாசில்) உரையாற்றுவதையும் சமுகமளித்தோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படம்: பேருவளை குறூப் நிருபர்)

'சீனன்கோட்டை முத்துக்கள்' ஏற்பாட்டில் இலவச புலமைப்பரிசில் கருத்தரங்கு

பேருவளை சீனன்கோட்டை பிரதேச சமூக சேவையாளர்களை ஒன்றிணைத்து இயங்கி வரும் 'சீனன்கோட்டை முத்துக்கள்' ஏற்பாட்டில் இம்முறை 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை (29) சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் (தேசிய பாடசாலை) கல்லூரியின் பாக்கிர் மாக்கார் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி அமைப்பின் தலைவர் ராமிஸ் நாஸிம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை, நளீம் ஹாஜியார் தேசிய பாடசாலை மற்றும் சீனன்கோட்டை ஆரம்ப பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். இக்கருத்தரங்கில் வளவாளராக ஹம்பாந்தோட்டை வலய ஆசிரிய ஆலோசகர் ஜனாப் சுஹுத் ஆசிரியர் கலந்து சிறப்பித்ததோடு, சமூக சேவையாளர் சர்பான் முஸம்மில் உட்பட ஏற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஒக்டோபர் 2 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை

சுபஹ்	05.04
லுஹர்	12.22
அஸர்	03.38
மஃரிப்	06.22
இஷா	07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம்	பகல்	1.30	3.00வரை
சுபநேரம்	காலை	10.30	12.00வரை

யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

நாட்டிற்குள் போதைப்பொருளை கொண்டு வருவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை

இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

சிறுவர்களின் எதிர்காலத்தினை பாதுகாக்க வேண்டுமானால் நாட்டிலிருந்து போதைப் பொருளை முற்றாக இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மகளிர் விவகார சிறுவர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் போதைப்பொருள் வர்த்தகத்தை முற்றாக இல்லாதொழிக்க நடவடிக்கை எடுப்பதுடன் நாட்டுக்குள் போதைப் பொருட்களை கொண்டு வரும் நபர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் உலக சிறுவர் தினத்தையொட்டிய நிகழ்வுகளில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதால் சமூகத்தில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டு வருவதாகவும் அதனால் பெண்களே அதிகளவில் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனை கவனத்திற் கொண்டு போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்கு கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பீஜிங் பல்கலைக்கழக மாணவர்களுடன் பந்துல குணவர்தன சந்திப்பு

சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்ற "2023 உலகளாவிய நிலையான போக்குவரத்து அமைப்பு" மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன மாநாட்டின் பின்னர் பீஜிங் வெளிநாட்டு (Beijing Foreign Studies University) கற்கைகள் பல்கலைக்கழகத்திற்கு விசேட விஜயமொன்றை மேற்கொண்டார்.

கொன்பியூசியஸ் சீன கல்வித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட புலமைப்பரிசிலின் கீழ் பீஜிங் வெளிநாட்டு ஆய்வுகள் பல்கலைக்கழகத்தில் தனது தத்துவவியல் பட்டத்தை அமைச்சர் பெற்றுள்ளார். அங்கு சிங்கள மொழி மூலம் பல்கலைக்கழகத்தில் தமது கற்கைகளை மேற்கொள்ளும் மாணவர்கள் மற்றும் குழுவினருடன் அமைச்சர் எடுத்துக் கொண்டு படம்.

புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் பலி

ஓமந்தை விஷேட நிருபர்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோம்பாவில் பகுதியில் நேற்று முன்தினம் (30) நள்ளிரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

7 ஆம் வட்டாரம் சிவநகர் புதுக்குடியிருப்பு பகுதியினை சேர்ந்த கஜலன் (வயது 28) என்ற இளைஞனே மோட்டார் சைக்கிள் விபத்தில் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் வைக்கப்பட்டு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான விசாரணையினை புதுக்குடியிருப்பு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

சுங்கத்திணைக்களத்திற்கு புதிதாக 138 உதவி சுங்க அத்தியட்சகர்கள் நியமனம்

விண்ணப்பங்கள் பரீட்சைகள் திணைக்கள இணையதளத்தில் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

லோரன்ஸ் செல்வநாயகம்

சுங்கத் திணைக்களத்திற்கு அதிகாரிகள் மற்றும் சுங்க பரிசோதகர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் 138 உதவி சுங்க அத்தியட்சகர்கள் மற்றும் 45 சுங்கப் பரிசோதர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்சேர்ப்புக்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த செப்டம்பர் 22 ஆம் திதி வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர் எதிர்வரும் அக்டோபர் 16ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை அதற்கான விண்ணப்பிக்கும் காலம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கான விண்ணப்பம் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

06

45 Kg வல்லப்பட்டையுடன் வங்கி அதிகாரி ஒருவர் கைது

பாணந்துறை பகுதியில் பொலிஸார் அதிரடி

45 கிலோ கிராம் வல்லப்பட்டையை காரில் கடத்திச் சென்ற ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி ஒருவரை பாணந்துறை வலான மத்திய ஊழல் தடுப்பு பிரிவினர் நேற்று (01) கைது செய்துள்ளனர். பேருவளை ஹெட்டிமுல்ல பிரதேசத்தை சேர்ந்த 63 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை வடக்கு கடற்கரை சந்தியில் காரை நிறுத்திய குற்றத்தடுப்புப் பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட அதிகாரிகள் குழு காரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 45 கிலோ வல்லப்பட்டையை கண்டு பிடித்து காரைக் கைப்பற்றியதோடு குறித்த நபரையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பலஸ்தீன கொடி தின பட்டமேற்றும் விழா

பலஸ்தீனுக்கான இலங்கைத் தூதரகம் பலஸ்தீன ஒத்துழைப்புக் குழுவின் ஒருங்கிணைப்புடன் பலஸ்தீனின் 2023ஆம் ஆண்டுக்கான கொடி தினத்தையொட்டிய பட்டமேற்றும் விழாவை நீர்கொழும்பு ஜெட்விங் புளு பீச் ஹோட்டல் பிரதேசத்தில் தூதுவர் கலாநிதி ஸுஹைர் முஹம்மத் ஹம்தல்லாஹ் சைட் தலைமையில் (30) நடாத்தியது.

இந்நிகழ்வின் அங்குரார்ப்பண நிகழ்வின் போது பலஸ்தீன கொடி தினத்தின் முக்கியத்துவத்தை பலஸ்தீன தூதுவர் தம் உரையின் போது எடுத்துக்கூறினார்.

இவ்வைபவத்தில் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் ஹமூத் அல் கஹ்தானி உட்பட கொழும்பில் கடமையாற்றும் பல நாடுகளின் தூதுவர்கள், உயர் ஸ்தானிகர்கள், பலஸ்தீன ஒத்துழைப்புக்குழுவின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அறிவுக்களஞ்சியம் போட்டியில் மொறட்டுவ அறபாத் சம்பியன்

மொறட்டுவை மத்திய விசேட நிருபர்

அகிலஇலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பாணந்துறைக் கிளை நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்த மாணவர்களுக்கான போட்டி நிகழ்ச்சிகள் ஜீலான் மத்திய கல்லூரியின் உம்முல் மலீஹா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சிறப்பு போட்டியாக பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற அறிவுக்களஞ்சியம் போட்டியில் மொறட்டுவை அறபாத் முஸ்லிம் மகா வித்தியாலய அணி சாம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

இறுதிப்போட்டியில் ஜீலான் மத்திய கல்லூரி அணியை 25 மேலதிக புள்ளிகளில் வெற்றிகொண்டு சாம்பியனாக தெரிவாகியது.

வெற்றியீட்டிய அறபாத் அணியின் உறுப்பினர்களான அப்துல்லா சரூரி, சகரிய்யா கௌஸ், யூஸுப் யஸார், நவீத் நஜிப்தீன், உமர் ஹம்தான் நிப்ராஸ் ஆகியோர் கிடைத்த விருதுகளுடன் பொறுப்பாசிரியை ஸபா இர்ஷாதுடனும் படத்தில் காணப்படுகின்றனர்.

கோமரை இல்ல தேவாலயம் மற்றும் பொரளை புனித லூக்கா தேவாலயம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம் அண்மையில் கோமரை தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றபோது...

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	238.54	249.41
கனடியன் டொலர்	256.80	267.07
யூரோ	340.83	352.42
ஜப்பான் யென்	2.5659	2.6696
சிங்கப்பூர் டொலர்	239.52	248.06
ஸ்டேலிங் பவுன்ஸ்	423.68	438.67
சுவிஸ் பிராங்க்	344.01	357.45
அமெரிக்க டொலர்	322.72	334.99

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	831.93	கட்டார் ரியால்	85.92
குவைத் டினார்	1,028.76	சவூதி ரியால்	83.64
ஓமான் ரியால்	814.75	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	85.39

தினகரன்

THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

குறள் தரும் சிந்தனை

வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்தது இல்

ஒருவன் இடமெல்லாம் நிறைந்த பெரும் பொருளைச் சேர்த்து வைத்து அதை உண்டு நுகராமல் இறந்து போனால் அவன் அந்தப் பொருளால் செய்ய முடிந்தது ஒன்றுமில்லை.

இயற்கை அனர்த்தங்களில் அதிக விழிப்புணர்வு தேவை!

நாட்டின் சில மாகாணங்களில் கடந்த பல தினங்களாக அடிக்கடி மழை பெய்த வண்ணமுள்ளது. தற்போதைய மழைக்காலநிலை எதிர்வரும் ஆறாம் திகதி வரையும் நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. தற்போதைய மழைக்காலநிலையினால் குளங்கள், ஏரிகள், நீரேந்து பிரதேசங்கள், தாழ் நிலங்கள், நீர்த்தேக்கங்கள் என்பன நீரினால் நிரம்பியுள்ளன.

அத்தனகலு ஓயா, நில்வள கங்கை, களு கங்கை, மகுரு கங்கை ஆகியன பெருக்கெடுக்கும் நிலையை அடைந்துள்ளதோடு மில்லகந்த போன்ற தாழ்நிலங்களிலும் வெள்ளநிலை ஏற்பட்டுள்ளது. மேலதிக நீரை வெளியேற்றும் வகையில் உடவளவ, ரன்டம்பே, விக்டோரியா ஆகிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் பதுளையிலுள்ள ராவண எல்ல நீர்வீழ்ச்சி, கொலஸ்லந்தவிலுள்ள தியலும நீர்வீழ்ச்சி, ஹல்துமுல்லவிலுள்ள பம்பரகந்த நீர்வீழ்ச்சி, மீஹாகியூலவிலுள்ள துன்ஹிந்த நீர்வீழ்ச்சி ஆகியனவும் அதிக நீர் வடிந்தோடும் நிலையை அடைந்துள்ளன.

இந்நிலையில் அனர்த்த முகாமைத்துவ நிலையம், 'தற்போதைய சூழலில் நீர் வீழ்ச்சிகளைப் பார்வையிடச் செல்பவர்கள் அங்கு நீராடுவதையும் அருகில் செல்வதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுள்ளது. குறிப்பாக அப்பிரதேசத்தில் வசிப்பவர்களும் உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் இந்த அறிவுறுத்தல் குறித்து கூடுதல் கவனம் செலுத்தத் தவறக்கூடாது' என்றும் அந்நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை பம்பஹின்ன, சமனநலவெவ மற்றும் கல்தொட்ட ஊடாக கூரகல புனித பூமி, தப்தர் ஜெய்லானி பள்ளிவாசல் மற்றும் தூவிலி போன்றவற்றை பார்வையிட செல்லும் பொது மக்கள் முன்னெச்சரிக்கையுடனும் விழிப்புடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று கல்தொட்ட பொலிஸார் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

வளவகங்கை, களுகங்கை, சமனலவெவ நீர்த்தேக்கம் ஆகியவற்றின் நீர்மட்டம் அதிகரித்து வருவதால், ஆற்றங்கரையோரங்களில் கூடாரம் அமைத்துத் தங்குதல், செல்பி எடுத்தல், நீராடுதல், மீன்பிடித்தல் போன்றவாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

உண்மையில் இது காலத்திற்கு அவசியமான அறிவுறுத்தலும் வேண்டுகோளும் ஆகும். ஏனெனில் தற்போதைய மழைக்காலநிலையுடன் சேர்த்து குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீரேந்து பிரதேசங்களின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருவதோடு எந்த வேளையிலும் திடீரென நீர்மட்டம் அதிகரிக்கலாம். அதனால் நீர்வீழ்ச்சிகளிலும், குளங்களிலும் ஆறுகளிலும் நீராடுவதையும் அவற்றுக்கு அருகில் செல்வதையும் மாத்திரமல்லாமல் மீன்பிடித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கங்கைகளில் நீரோட்டம் காணப்படும் போதும் குளங்களில் வான் போடும் போதும் நீராடுவதற்கு ஆர்வம் காட்டுபவர்கள் சமூகத்தில் அதிகமுள்ளனர். ஆனால் தற்போதைய மழைக்காலநிலையினால் ஆறுகளிலும் கங்கைகளிலும் நீர்வீழ்ச்சிகளிலும் நீரோட்டம் திடீரென அதிகரிக்கக்கூடிய அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன. ஏற்கனவே பல இடங்களில் இவ்வாறு திடீரென நீர்மட்டம் உயர்ந்து உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன,

அதனால் இவ்வாறான இடங்களில் நீராடுவதையும் மீன்பிடித்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவதையும் தவிர்த்துக் கொள்ளவதில் கூடுதல் கவனம் செலுத்துவது வேண்டும். அதன் ஊடாக நீரில் அடித்துச் செல்லப்படுதல், நீரில் மூழ்கி உயிரிழத்தல் போன்றவாறான உயிராபத்து அனர்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

தற்போதைய மழைக் காலநிலையுடன் சேர்த்து மலையகத்திலும் மலைசார்ந்த பிரதேசங்களிலும் மண்சரிவு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனை உறுதிப்படுத்தியுள்ள தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம், காலி, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, பதுளை உள்ளிட்ட 8 மாவட்டங்களில் உள்ள 30 பிரதேச செயலப் பிரிவுகளுக்கு மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுத்திருக்கிறது. அதனால் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வாழ்பவர்கள் முன்னெச்சரிக்கையுடனும் விழிப்புடனும் செயற்படுவது அவசியம் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

தற்போதைய சூழலில் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வீட்டுச் சுவர்களிலும் நிலத்திலும் திடீரென வெடிப்புக்கள் ஏற்படல், நீரூற்றுகள் உருவாதல், அவற்றின் ஊடாக சேற்று நீர் வெளிப்படல், மரங்கள் திடீரென சாய்தல் போன்றவான அறிகுறிகள் ஏற்படுமாயின் தாமதமின்றி பாதுகாப்பாக இடங்களை நோக்கி மக்கள் இடம்பெயரவும் தவறக்கூடாது.

இவ்வாறான ஏற்பாடுகளின் ஊடாக மழைக்காலநிலையினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும். அந்த அனர்த்தங்கள் குறித்து பொதுமக்களும் விழிப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும செயற்பட வேண்டும். அதுவே இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

அனைத்து மதங்களின் மக்களுக்கும் நல்வழிகாட்டி புனித அல் குர்ஆன்

– சம்மாந்துறையில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்

புனித அல் குர்ஆன் இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து மதத்தவர்களுக்கும் ஒரு பொதுவான நல்ல வழிகாட்டி' என்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சம்மாந்துறையில் இடம் பெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

சம்மாந்துறை அஹதியா (முஸ்லிம் தஹம்) பாடசாலைகளின் கூட்டிணையத்தின் ஏற்பாட்டில் அஹதியா சான்றிதழ் வழங்குதல் கௌரவிப்புவிழா சில தினங்களுக்கு முன்னர் சம்மாந்துறை நகர மண்டபத்தில், அமைப்பின் தலைவர் ஆசிரிய ஆலோசகர் இசட்.எம். றிஸ்வி தலைமையில் நடைபெற்றது .

அங்கு கிழக்கு மாகாண போக்குவரத்து ஆணைக்குழு தலைவர் றணீஸ், கிழக்கு மாகாண நிருவாகத்தின் உயரதிகாரிகளான ஏ. மன்சூர், ஏ. நசீர் றிபாஉம்மா, பிரதேச செயலாளர் ஹனிபா, முன்னாள் செயலாளர் அஷ்சேய்க் அமீர், சர்வசமய சம்மேளன செயலாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தார்கள்.

அங்கு ஆளுநர் மேலும் உரையாற்றுகையில் "உலகில் உள்ள சிறந்த மதங்களில் இஸ்லாமிய மதமும் ஒன்றாகும். மனிதன் எவ்வாறு வாழ வேண்டும், எவ்வாறு நல்ல விடயங்களை முன்னெடுக்க வேண்டும் போன்ற தத்துவங்கள் நிறையவே அதில் இருக்கின்றன.

இஸ்லாம் ஒரு நல்லதொரு வழிகாட்டி. அந்த வகையில் அறநெறி பாடசாலை மாணவர்களில் இன்று சான்றிதழ் பெறுகின்றவர்கள் உண்மையிலேயே சிறந்தவர்கள் என்று சொல்லலாம். அறநெறி பாடசாலைகளில் மனிதத்துவம் கட்டி எழுப்பப்படுகின்றது. அவர்கள் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான அடிப்படை அறிவை ஆளுமையை அங்கு பெறுகின்றார்கள்.

இதேபோன்று இஸ்லாமிய அமைப்புகள் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் இவ்வாறான செயற்பாடுகளை செய்ய வேண்டும். இவற்றுக்கு உதவுவதற்கு கிழக்கு மாகாண சபை என்றும் தயாராக இருக்கின்றது. பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப், இணைப்பாளர் றணீஷ் போன்றோர் முஸ்லிம் பிரதேச அபிவிருத்தியில் கூடுதலான கவனத்தைச் செலுத்தி வருகின்றார்கள்.

அவர்களுக்கான ஒத்துழைப்பை வழங்கக் காத்திருக்கிறேன். பொத்துவில் வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக தரமுயர்த்த இன்று காலை முஷாரப் எம்.பி. என்னைச் சந்தித்து பேசினார். அனைத்தும் நன்றாகவே நடக்கும்" என்றார். இந்நிகழ்வின் போது ஆளுநருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

அதைப்போல சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து ஹனிபாவும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அறநெறி பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

– காரைதீவு குறூப் நிருபர்

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவும் ஒன்றுகூடலும்

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் (நுஜா) 19 ஆவது ஆண்டு நிறைவும், வருடாந்த ஒன்றுகூடலுடன் புதிய நிருவாகத் தெரிவும் கடந்த 30 ஆம் திகதி இரவு (30.09.2023) அட்டாளைச்சேனை யாடோ ஹோட்டலில் நடைபெற்றன.

நுஜா ஒன்றியத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் தலைமையில் நடைபெற்ற இந்த ஒன்றுகூடல் நிகழ்வுக்கு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், கரையோரப் பிரதேசங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்த ஒன்றுகூடலின்போது கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பலவிடயங்கள் பற்றியும், ஒன்றியத்தின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புக்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் புதிய நிருவாகத் தெரிவு இடம்பெற்றது.

இங்கு தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளரும், ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகருமான பன்னூலாசிரியர் எஸ்.எல்.மன்சூர் மற்றும் இளம் ஊடகவியலாளரும் தொழிலதிபருமான ஏ.ஆர்.முனாஸ் ஆகியோர் அதிதிகளினால் பொன்னாடை போர்த்தி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்த பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப், சமகால நாட்டு நடப்புகள் குறித்தும் முஸ்லிம் அரசியலில் ஊடகவியலாளர்களின் வகிபாகம் குறித்தும் நீண்ட உரையொன்றை இங்கு நிகழ்த்தினார்.

இங்கு 2023/2024 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையின் தலைவராக எஸ்.எம்.அறூஸ் தெரிவானார். பிரதித் தலைவர்களாக எஸ்.எல்.மன்சூர், எம்.எச்.முஸ்தாக் முகம்மட் ஆகியோரும் செயலாளராக பைசல் இஸ்மாயிலும் தெரிவாகினர்.

பிரதிச் செயலாளராக ஏ.எல்.கியாஸ்தீன், பொருளாளராக ஜூல்பிகா செரீப், உதவிப் பொருளாளராக எம்.ஐ.சியாத், தவிசாளராக ஏ.எல்.றமீஸ், பிரதித் தவிசாளராக எம்.ஏ.தாஜ ஹான், தேசிய அமைப்பாளராக எம்.ஐ.எம்.றியாஸ், பிரதித் தேசிய அமைப்பாளராக ஏ.எம்.ரபீக், தேசிய ஒருங்கிணைப்பாளராக எம்.ஜே.எம்.அஸ்ஹர், பிரதித் தேசிய ஒருங்கிணைப்பாளராக பீ.எம்.றியாத்,

நிர்வாக குழு உறுப்பினர்களாக எஸ்.சீனிஸ்கான், யு.எல்.சிப்லியா, ஐ.எம்.ஹம்தான், என்.எம்.பௌசர், எம்.எல்.எம்.பாரீஸ், சித்திசபானா, எஸ்.எல்.அப்ரின், ஜீ.றுஸ்வின், எப்.அஸ்பர் சபா, டி.எம்.அறபாத், எம்.சியாம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போசகராக பாராளுமன்ற உறுப்பினரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப் தெரிவானதுடன், சிரேஷ்ட ஆலோசகர்களாக எஸ்.எல்.எம்.அபுபக்கர், ஐ.எல்.எம்.தாஹீர், கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜகுபர் ஆகியோரும் இதன்போது தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ், பொத்துவில் மக்கள் வங்கி உத்தியோகத்தர் எம்.ஐ.நபீல், கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜௌபர், தொழிலதிபர் ஏ.ஆர்.முனாஸ், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்களான எம்.ஜே.எம்.அஸ்ஹர், ஏ.எல்.மர்ஜான் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

– முகம்மது றியாஸ்
(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

தமிழக திராவிடப் பெரியார்களின் ஏகலைவனாக உருவெடுத்த மாபெரும் படைப்பாளி வேலழகன்

– கிழக்கின் மூத்த எழுத்தாளர் ஆ.மு.சி.வேலழகன் மறைவு இலக்கிய உலகுக்கு பேரிழப்பு

செப்டெம்பர் மாதம் தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் பிறந்த மாதம். இவர்களை இங்கு குறிப்பிடக் காரணம் இவர்களின் வழியில் ஏகலைவனாக உருவான ஒரு படைப்பாளி, இதே மாதம் 23 ஆம் திகதி காலமாகி விட்டார். கிழக்கிலங்கையில் திருப்பழுகாமம் எனும் தமிழரது தனித்துவமான நிலப்பரப்பு புகழ் மிக்கது. அந்நிலத்தே தோன்றியவர் வேல்முருகு என்னும் இயற்பெயர் கொண்ட எழுத்தாளர் ஆ.மு.சி.வேலழகன்.

1939.05.12இல் பிறந்த இவர் கடந்த 2023.09.23 இல் தனது 84 ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

விவசாயக் குடும்பத்தில் பிறந்து சிறு வயது முதலே பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து, பாடசாலைப் படிப்பினை முழுமையாகப் பெற முடியாது வளர்ந்த வேல்முருகு, சிறுவயதிலேயே திராவிடத் தலைவர்களின் எழுத்துக்களின்பால் ஈர்க்கப்பட்டு, தேடித்தேடி பழம்பெரும் நூல்களை எல்லாம் கற்று, 1972 இல் 'வேலழகன்' எனும் பெயரில் எழுதத் தொடங்கினார்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி முதல் பேராசிரியர் சி.மௌனகுரு வரை இவரது படைப்பாளுமையினைப் போற்றிய பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலர். பள்ளிக்கூடக் கல்வியை முழுமையாகப் பெறாத ஒருவரின் படைப்புக்களை இலங்கை, தமிழ்நாடு பல்கலைக்கழங்களைச் சேர்ந்த பல மாணவர்கள் ஆய்வு செய்து தம் பட்டப்படிப்புக்களை பூர்த்தி செய்துள்ளனர்.

'ஒவ்வொரு எழுத்தாய் கூட்டிக் கூட்டித் தான் வாசிக்கப் பழகினேன்' எனக்கூறிய ஆ.மு.சி, பின்னாளில் மரபுக்கவிதை எழுதுவது எப்படி எனும் தொடரை மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் தென்றல் இதழில் எழுதினார். இத்தொடர் 'கலைகளுக்கெல்லாம் அரசு கவிதை' எனும் நூலாக வெளிவந்தது.

இவருடைய பல சிறுகதை தொகுப்புக்கள், நாவல்கள், கவிதை நூல்கள் மாகாணம் முதல் தேசிய அளவில் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளதோடு, தமிழ்நாட்டிலும் பல விருதுகளைப் பெற்றுள்ளன. படுவான்கரை மண்ணின் பேச்சு வழக்கில், அம்மக்களின் வாழ்வியல் அம்சங்களைப் பேசு பொருளாகக் கொண்டு இவர் உருவாக்கிய பெரும்பாலான படைப்புக்கள் பல்வேறு தரப்பினராலும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளன.

1972 முதல் 2023 வரை இதுவரை 40 தலைப்புக்களில் 45 நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றில் 3 நூல்கள் 2 ஆம் பதிப்பும், 1 நூல் 3 பதிப்புக்களையும் கண்டுள்ளது. இவரது இறுதி நூலான 'நான்காம் பாலினம்' 41ஆவது நூல், 46ஆவது வெளியீடாக அமைய வேண்டியதாகும். நூல் வெளியாகும் முன்னரே வேலழகன் நம்மை விட்டுப் பிரிந்தது பெருந்துயரம். தமிழ்ப்படைப்பாளிகளுள் சிறுகதை, நாவல், குறுநாவல், கவிதை, ஆய்வு, வரலாறு, இலக்கணம் எனப் பல்துறைகளில் எழுதிய ஆளுமைகள் மிகக் குறைவு. இவை அனைத்திலும் எழுதி வெற்றி பெற்றவர் வேலழகன். தரம் மிகுந்த படைப்புக்களுடன் புத்தகங்களைக் கூட மிகத் தரமானதாக உருவாக்குவதில் தேர்ந்தவர்.

இவருடைய நூல்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரைகளைத் தொகுத்தாலே அவரது படைப்பாளுமையினை அறிந்து கொள்ளலாம். மட்டக்களப்பின் இலக்கிய வளர்ச்சியில் இவரது பங்களிப்பு அபரிமிதமானது. பழுகாமம் முதல் வாழைச்சேனை வரை இவர் உருவாக்கிய இலக்கியப் பரம்பரைகளும், திருக்குறளை எல்லோரிடமும் கொண்டு சேர்ப்பதற்கென இவர் மேற்கொண்ட பணிகளும் ஏராளம். தன்னுடைய பெரும்பாலான நூல்களுக்கு குறளடிகளையே பெயராகப் பயன்படுத்தினார். குறளின் மாண்பு குறித்தும் 03 நூல்கள் எழுதியுள்ளார். வாழும் வள்ளுமாகத் திகழ்ந்தவர், இறுதியில் தான் பிறந்த மண்ணிலேயே நிலைகொண்டு அமரராகி விட்டார்.

– எஸ்.ஏ.ஸ்ரீதர்
வாழைச்சேனை

கற்பித்தலிலும், இலக்கியத்திலும் சிறந்து விளங்கிய மருதமுனை ஆசிரியர் டீன் கபூர்

– 31 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு

தனது 31 வருட ஆசிரிய சேவையில் இருந்து மருதமுனை டீன் கபூர் அண்மையில் ஓய்வு பெற்றார். நல்லாசானாக இருந்து மாணவர்களை அரவணைத்து கற்பிக்கின்ற ஆற்றல் கொண்டவர் இவர். கவிஞனாக, ஓவியனாக தன்னை தடம் பதித்துக் கொண்டவர். சகலருடனும் நல்லுறவை பேணிவருகின்ற மனித நேயம் கொண்டவர். இலக்கியப் பரப்பில் அதிக நண்பர்களை தன்னகத்தே கொண்டவர். இவரது முகநூலில் இவர் வரைந்த சித்திரங்களையும், ஓவியங்களையும், கவிதைகளையும் பார்த்து ரசிக்கலாம்.

சக ஆசிரியர்களுடனும், மாணவர்களுடனும் அன்பாகப் பழகி தனது ஆசிரியப் பணியை சிறப்பாகச் செய்தவர். இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டவர். அத்துடன் பாடசாலைகளில் நடைபெறுன்ற நிகழ்வுகளை அறிவிப்பாளராகத் தொகுத்து வழங்கியவர். பாடசாலைகளின் சுற்றுச்சூழலை அழகுபடுத்துவதிலும் மரக்கன்றுகளை நட்டு பராமரித்ததிலும் இவரது பங்களிப்பு அதிகம். மருதமுனையைச் சேர்ந்த அப்துல் கபூர், காதர் பீபி தம்பதிக்கு மகனாக 1963.07.08 ஆம் திகதி மருதமுனையில் பிறந்தவர் டீன் கபூர். மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் பழைய மாணவர். சிறுவயதில் இருந்து இன்று வரை கலை, இலக்கியத் துறையில் தடம் பதித்து வருகின்றார். இதுவரை நான்கு கவிதைப் புத்தகங்களை வெளியிட்டுள்ளார். 1992.05.15ஆம் திகதி ஆசிரியர் நியமனம் பெற்று மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் கடமையேற்று தனது ஆசிரியப் பணியை 2001 ஆம் ஆண்டு வரை முன்னெடுத்தார். அதன் பின்னர் பல பாடசாலைகளில் இடமாற்றம் பெற்று 2011ஆம் தொடக்கம் 2019ஆம் ஆண்டுவரை மீண்டும் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் கடமையாற்றினார். 2019ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்று நிந்தவூர் அஸ்ஸபா வித்தியாலயத்தில் கடமையாற்றி சமீபத்தில் ஓய்வு பெற்றார்.

– பி.எம்.எம்.ஏ.காதர்
(மருதமுனை தினகரன் நிருபர்)

கிழக்கின் குரல்

தம்பலகாமம் வைத்தியசாலையில் திடீர் தீ; எவருக்கும் பாதிப்பில்லை

உடனடி விசாரணைக்கு கிழக்கு ஆளுநர் பணிப்பு

ரொட்டவெவ குறூப், முள்ளிப்பொத்தான குறூப், தம்பலகாமம் தினகரன், கிண்ணியா மத்தி, குறூப், கந்தளாய் தினகரன் நிருபர்கள்

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் நேற்று (01) திடீரென தீப்பரவல் இடம்பெற்றுள்ளது.

மேற்படி வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவு மற்றும் மருந்தகம் போன்ற பகுதிகளிலே இத்தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய தினம் காலை ஆறு மணியளவில் சத்தமொன்று கேட்டதாகவும் பின்னர் தீப்பற்றியதாகவும் அயலவர்கள் தெரிவிக்கின்றனர். வைத்திய சாலையில் நோயாளர்கள் எவருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிய வருகின்றது

இருந்தும் தீப்பற்றியமைக்காண காரணம் இதுவரை தெரியவில்லை எனவும் விசாரணைகளை முன்னெடுத்து வரும் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி வைத்தியசாலை தீ விபத்து தொடர்பில் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் உடனடியாக மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், மாகாண பணிப்பாளர் ஆகியோரை தொடர்பு கொண்டு, மேற்படி சம்பவம் தொடர்பில் உடனடியாக களநிலவரங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார். மேலும் தீ விபத்து தொடர்பான காரணங்களை கண்டறிய மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் ஆளுநர் பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அட்டாளைச்சேனை பஸ் பயணிகள் தரிப்பிடத்தை புனரமைக்க கோரிக்கை

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

அக்கரைப்பற்று – கல்முனை பிரதான வீதியில், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலைக்கு முன்பாக சேதமடைந்துள்ள பஸ் பயணிகள் தரிப்பிடத்தை அவசரமாகப் புனரமைத்து உதவுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பலத்த காற்று காரணமாக, கூரை உடைந்து விழுந்த நிலையில், பாவனையின்றி கடந்த இரு வாரங்களுக்கும் மேலாகக் காட்சியளிக்கும் குறித்த பஸ் பயணிகள் தரிப்பிடம் இதுவரை புனரமைக்கப்படாதது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் அட்டாளைச்சேனை பிரதேச சபைச் செயலாளரிடம் வினவியபோது, குறித்த தரிப்பிடம் கிழக்கு மாகாண வீதி போக்குவரத்து அதிகார சபையின் நிர்வாகத்திற்குரியது. இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

குறித்த பயணிகள் தரிப்பிடத்தை பொதுமக்களுடன், பாடசாலை மாணவர்களும் அதிகம் பயன்படுத்தி வருகின்றனர். தற்பொழுது பிராந்தியத்தில் மழைக்காலநிலை நிலவுவதனால் சம்பந்தப்பட்டவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் குறிப்பிடுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் 32வருட அரச பணியிலிருந்து ஓய்வு

மாவட்ட செயலகத்தில் மாபெரும் பிரியாவிடை

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்ட செயலக உத்தியோகத்தர்களாக என்னுடன் கடமை புரிந்த உங்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பினால் செவ்வனே எனது மக்கள் பணியை நான் மாவட்டத்திற்காக ஆற்ற முடிந்திருந்தது, அதனால் மனநிறைவுடன் எனது 32 வருட அரச பணியில் இருந்து ஓய்விற்கு செல்கின்றேன் என மட்டக்களப்பில் (இடம்பெற்ற பிரியாவிடை நிகழ்வின்போது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. கலாமதி பத்மராஜா தெரிவித்துள்ளார்.

32 வருடங்கள் அரச சேவையை பூர்த்தி செய்து அரச சேவையில் இருந்து ஓய்வு பெறும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கு (27) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பிரியாவிடை நிகழ்வொன்று இடம்பெற்றது.

1991 ஆம் ஆண்டு அரச நிருவாக சேவையில் தனது அரச பணியை தொடங்கிய திருமதி கலாமதி பத்மராஜா, அம்பாறை மாவட்டத்தில் தமது முதல் நியமனத்தை பெற்று கடமையை ஆரம்பித்ததுடன், பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உதவிப் பிரதேச செயலாளராக நியமனம் பெற்று தமது கடமையினையாற்றியுள்ளார். 2020 ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக கடமைப் பொறுப்பினை ஏற்று பணியாற்றி வந்த நிலையில் மீண்டும் இடமாற்றலாகி மாகாண சபையில் கடமையாற்றி, இவ்வாண்டு தை மாதம் 17 திகதி முதல் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக அமைச்சரவை அங்கிகாரத்துடன் மீளவும் நியமிக்கப்பட்டு செவ்வனே தமது கடமையினை மாவட்ட மக்களுக்காக ஆற்றிவந்த நிலையில் எதிர்வரும் 29 ஆந் திகதி தமது 60 வயதினை பூர்த்தி செய்து அரச சேவையில் இருந்து ஓய்விற்கு செல்லவுள்ள நிலையில் மாவட்ட அரசாங்க அதிபரான இவரின் சிறந்த சேவையினை பாராட்டி பிரியாவிடையளிக்கும் நிகழ்வானது மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சனி சிறிகாந்த் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

உயர் அரச அதிகாரிகள், மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டு ஓய்வு பெறவிருக்கும் அரச அதிபரின் சேவையினை வாழ்த்தியதுடன் அரச அதிபரிற்கு பொன்னாடை போர்த்தி மலர் மாலைகள் அணிவித்து கௌரவமளித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

திருகோணமலை மாவட்டத்திலிருந்து

பல்கலைக்கு தெரிவு செய்யப்பட்ட மூவின மாணவர்களுக்கும் நிதியுதவி

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து 2022 ம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு நகர சபை மண்டபத்தில் (30) நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட நலன் புரிச்சங்கத்தின் தலைவர் எஸ். குகதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கணிதம், உயிரியல் விஞ்ஞானம், பொறியியல் தொழில்நுட்ப, விஞ்ஞான தொழில்நுட்ப, கலை மற்றும் வர்த்தக பிரிவுகளில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடங்களைப் பெற்ற மூவின மாணவர்கள் ஆறு பேருக்கும் 2021 ம் ஆண்டு இம் மாவட்டத்தில் இருந்து பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 41 மாணவர்களுக்கும் தலா 25,000 ரூபா நிதி கொடுப்பனவு வழங்கப்பட்டது.

2021 ம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 41 மாணவர்களின் கற்கை நெறி நிறைவடையும் வரை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை ஒவ்வொரு மாணவர்களுக்கும் தலா ரூபா 25000 தொடர்ச்சியாக வழங்கப்படவுள்ளதென சங்கத்தின் தலைவர் எஸ். குகதாசன் தெரிவித்தார்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் மாணவர் பாராளுமன்றத் தேர்தல்

கல்வி அமைச்சின் புதிய சுற்றுநிருபம் மற்றும் அறிவுறுத்தலுக்கமைய மாணவர் பாராளுமன்ற தேர்தல் முறைமை பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் தேர்தல்கள் திணைக்களமும் கல்வியமைச்சும் இணைந்து பாடசாலைகள் தோறும் மாணவர் பாராளுமன்றங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட மஹ்மூத் மகளிர் கல்லூரியில் (தேசிய பாடசாலை) 2023 ஆம் ஆண்டுக்கான மாணவர் பாராளுமன்றம் அமைப்பதற்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டு தெரிவுக்கான தேர்தல் கல்லூரி அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் இடம்பெற்றது.

மாணவர் பாராளுமன்ற தேர்தல் குழு இணைப்பாளர் ஏ.எம். அஸ்வர் ஆசிரியரின் ஏற்பாட்டில் இடம் பெற்ற கூட்டத்தில் தேர்தல் ஆணையாளராக கல்லூரி அதிபர் நியமனமானார். .

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவர் பாராளுமன்றத்துக்கு 150 மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு தரம் 6 முதல் 13 வரையுள்ள 2500 இற்கு மேற்பட்ட மாணவிகள் வாக்களிக்க தகுதி பெற்றிருந்ததுடன் வாக்களிக்கும் பணிகள் பிற்பகலில் நடைபெற்றன.

மாணவிகள் மிக அமைதியான முறையில் மிக நீண்ட வரிசைகளில் நின்று தமது வாக்குகளை ஆர்வமாக பதிவு செய்து சென்றதனை காணக்கூடியதாக இருந்தது.

தரம் 6 முதல் 13 வரையுள்ள மாணவிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் மாணவ பிரதிநிதிகளைக் கொண்டு மாணவர் பாராளுமன்றம் தாபிக்கப்படும். இதில் சபாநாயகர், பிரதமர், 10 அமைச்சர்கள், 10 பிரதி அமைச்சர்கள் என இத்தேர்தலின் ஊடாக தெரிவு செய்யப்படுகின்றனர்.

_அஸ்ஹர் ஆதம்
(கல்முனை குறூப் நிருபர்)

தேசிய மீலாதுன் நபி தினத்தை முன்னிட்டு "நபி பெருமையை உலகறியச் செய்வோம்" எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற மீலாதுன் நபி தின நிகழ்வு மருதமுனை அரசடி சந்தியில் (28) இடம் பெற்றது. இதில் மருதமுனை அல்மினன் மத்ரஸா மாணவர்கள், வர்த்தகர்கள், உலமாக்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (படங்கள் பெரியநீலாவணை விசேட நிருபர்)

சென்னையில் 'பரதேசி -யான்' நூல் வெளியீட்டு விழா

மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்ட எழுத்தாளர் கு. நித்தியானந்தன் எழுதிய 'பரதேசி யான்' சுயசரிதை நூல் வெளியிட்டு விழா கடந்த சனிக்கிழமை (30) சென்னையில் நடைபெற்றது.

இனிய நந்தவனம் பதிப்பகம் வெளியிட்டுள்ள இந்நூலை பிரதம விருந்தினராக கலந்துகொண்ட சகோ அஷ்வின் தைரியம் வெளியிட தொழிலதிபர் கலாநிதி அமுதா பாலகிருஷ்ணன் பெற்றுக் கொண்டார்

அருள்திரு சைமன் பொன்னையா, அருள்திரு ஏணர்ஸ்ட் ஜெயகுமார்,

வழக்கறிஞர் சி.ஜஸ்டின், ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். முனைவர் ஷாலின் ஜெரால்டு, அருள்திரு சாமுவேல்ராஜ் விசவாசம் இருவரும் நூல் குறித்து ஆய்வுரை நிகழ்த்தினர். கல்வெட்டும் பேசுகிறது இதழின் ஆசிரியர் சொர்ண பாரதி, செங்கரும்பு இதழின் ஆசிரியர் தாமரைப்பூவண்ணன் ஆகியோர். வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக நந்தவனம் சந்திர சேகரன் அனைவரையும் வரவேற்க எழுத்தாளர் பெருமாள் நல்லமுத்து அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்

பொலிஸ் சார்ஜன்ட் சடலமாக மீட்பு

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

பொலனறுவை வெலிக்கந்தை பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் சார்ஜன்ட் ஒருவர் பொலிஸார் தங்கும் விடுதியிலிருந்து இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேற்படி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஆக கடமையாற்றி வந்த ஏறாவூரைச் சேர்ந்த மக்பூல் முஹம்மது ஹனீபா (வயது 52) என்பவரே பொலிஸ் விடுதியிலிருந்து சனிக்கிழமை (30) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் இரத்த வெள்ளத்தில தோய்ந்திருப்பதை வைத்தும் சடலத்தில் காயம் இருப்பதனாலும் இது கொலையாக இருக்கலாம் என உறவினர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

சடலம் தற்போது உடற் கூராய்வுப் பரிசோதனைக்காக பொலன்னறுவை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக வெலிக்கந்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். தடயவியல் நிபுணர்களினதும் சட்ட வைத்திய அதிகாரியினதும் நீதிபதியினதும் விசாரணைகளில் மேற்படி பொலிஸ் அதிகாரியின் இறப்புக்கான காரணம் தெரிய வரலாம் என்று கூறப்படுகிறது.

கிண்ணியாவில் சிரமதானம்

கிண்ணியா தினகரன் நிருபர்

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பிரதேசத்தில் அதிகரித்துவரும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் வகையில் சிரமதான பணி கடந்த வெள்ளிக்கிழமை (29) நடைபெற்றது.

குறிஞ்சாக்கேணி கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர், மக்கள் பாதுகாப்பு குழு, பள்ளி நிர்வாக சபை, கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களுடன் கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் மாகாத் நகர் பிரதேசத்தில் இச்சிரமதான நிகழ்வு மிகவும் சிறப்பான முறையில் நடைப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கோரைக்களப்பு ஸ்ரீ சமாதிப்பிள்ளையார் ஆலயத்தில் திருமுறை முற்றோதல்

நம்பியாண்டார் நம்பியின் மூலம் தொகுப்பித்து சைவ உலகுக்கு கிடைக்கப்பெற்ற பொக்கிசமான பன்னிரு திருமுறை எனும் தமிழ் வேத நூலை ஓதும் திருமுறை முற்றோதல் நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வு திருக்கோவில் கோரைக் களப்பு ஸ்ரீ சமாதிப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட திருநாவுக் கரசு நாயனார் குருகுல ஆதினத் தின் அனுசரணையுடன் குருகுல ஸ்தாபக தந்தை ஸ்ரீமான் சுவாமிநா தர் தம்பையா அடிகளாரின் திவ்ய ஆசியுடன் முகாமைத்துவ பணிப் பாளர் இறைபணிச்செம்மல் கண. இராரெத்தினம் தலைமையில் ஆலயத் தலைவர் விஜயகுமாரின் ஒத்துழைப்போடு இடம்பெற்ற நிகழ்வுகளில் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்தி ரன் கலந்து கொண்டார். ஆலயத் தின் குருமார் மற்றும் 63 ஓதுவார் ஆலய நிருவாகத்தினர், அறநெறி ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

திருக்கோவில் கோரைக்களப்பு ஸ்ரீ சமாதிப்பிள்ளையார் ஆலயத் தின் கும்பாபிசேகம் கடந்த 04 ஆம் திகதி இடம்பெற்ற நிலையில், 63 நாயன்மார்களால் பாடப்பட்ட 18259 பாடல்கள் அடங்கிய பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வு தொடர்ச்சியாக இடம் பெற்றது.

தேவார புராண பாராயணத்தை

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ கிரு பாகரக்குருக்கள் வழங்கியதுடன் பிரதேச செயலாளரின் உரையும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஏடு திறத்தலும் பதிக பாராயணமும் இடம்பெற்று இறுதியாக ஆலய குருமார்களும் தம்பிலுவில் கண் ணகிஅம்மன் ஆலய கப்புகனார் மற்றும் பிரதேச செயலாளரும் பொன்னாடை போர்த்தி கௌர விக்கப்பட்டனர்.

நிறைவாக ஓதுவார்கள் அத்தனை பேருக்கும் பிரதேச செயலாளரினால் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டதுடன் சிவ சின்னமாக விளங்குகின்ற உருத் ராட்ச மாலையும் பன்னிரு திரு முறைகள் ஓதிய அடியவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், திருக்கோவில் பிரதேச செயலகம் அம்பாறை மாவட்ட திருநாவுக்க ரசு நாயனார் குருகுலம் பங்குபற் றுதலுடன் திருக்கோவில் பிரதே சத்தில் பன்னிரு திருமுறை ஓதல் இரண்டாவது தடவையாக இடம் பெற்றுள்ளது.முதல் தடவையாக முனையூர் படபத்திரகாளியம்மன் ஆலயத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

– வி.சுகிர்தகுமார்
வாச்சிக்குடா விஷேட நிருபர்

சினோபெக் நிறுவனம் எரிபொருட்களின் விலைகள் அதிகரிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

சினோபெக் நிறுவனம் நேற்று மாலை 6 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகளை அதிகரித் துள்ளது.

அதன்படி ஒக்டேன் 95 ரக பெட்ரோல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவால் அதி கரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 420 ரூபாவாகும். அதே வேளை, ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 348 ரூபா ரூபாவாகும்.

அத்துடன் சுப்பர் டீசல் லீட்டர் ஒன்றின் விலை 61 ரூபாவால் அதிகரித்துள்ளதுடன் அதன் புதிய விலை 417 ரூபாவாகும்.

எனினும் ஒக்டேன் 92 ரக பெட்ரோல் விலையில் எந்த திருத்தமும் மேற் கொள்ளப்படாத நிலையில் அது 358 ரூபா விற்கே விற்பனை செய்யப்படுகிறது.

இ.போ.ச பஸ் நடத்துனர் மீது தாக்குதல் 2 சந்தேக நபர்களில் ஒருவர் கைது

லோரன்ஸ் செல்வநாயகம்

அநுராதபுரத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இ.போ.ச பஸ் நடத்து னரை தாக்கிய சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அநுரா தபுரத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பயணிகள் பஸ் கெக்கிராவ பகுதியில் பய ணித்த போது இருவர் பஸ்ஸை நிறுத்தி நடத்துனர் மீது தாக்குதலை மேற்கொண் டதுடன், அவர் வைத்திருந்த டிக்கெட் உபகரணத்தையும் அடித்து நொறுக்கி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். எனினும் பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கையினால் சந்தேகநபர்கள் இருவரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளார் எனவும் மற்றைய நபரை கைது செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளதாகவும் கெக்கிராவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம் மற்றும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் ஆகியவை இணைந்து வெளியிட்ட ரொட்ணி விதான பத்திரனவின் சு.முரளிதரன் தமிழில் மொழிபெயரத்த "லண்டன் வெம்மை'' சிங்கள நாவல் வெளியிட்டு விழா நேற்று (1) ஞாயிறு கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பூபாலசிங்கம் புத்தகசாலையின் விற்பனைக்கூடத்தில் நடைபெற்றது. நாவலின் முதற்பிரதியை இலக்கியப் புரவலர் ஹாஷிம் ஒமர் கல்வி அமைச்சின் வெளியீட்டு திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகமும் நூலின் மொழிபெயர்ப்பாளருமான சு.முரளிதரனிடமும் நூலாசிரியர் ரொட்ணி விதானபத்திரனி டமும் பெற்று கொள்வதை காணலாம். ஸ்ரீதரசிங் பூபாலசிங்கமும் அருகில் காணப்ப டுகின்றார்.

சுங்கத்திணைக்களத்திற்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

அதன் மூலம் விண்ணப்பத்தை பெற்றுக்கொண்டு 21 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர் கள் இந்த பதவிகளுக்காக இணைக் கப்பட வுள்ளதாகவும் அவர்கள் தமது விண்ணப்பத்தை அனுப்ப முடியும் என்றும் அவர் தெரிவித் துள்ளது.

சிவனொளிபாத..

இல்லாத காலப்பகுதியில்கூட சிவனொளிபாத மலைக்கு சென்று வழிபடலாம் என அண்மைய நாட் களில் வெளியான செய்திகள் உண் மையல்ல எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

20222023 சிவனொளிபாத மலை பருவகாலம் நிறைவடைந்துள்ள நிலையில், ஸ்ரீ பாதஸ்தானாதிபதி சப்ரகமு மாகாண பிரதம சங்கநா யக பெங்கமுவே தம்மதின்னவின் பணிப்புரைக்கமைய அனுமதியின்றி ஹட்டன் வீதி மற்றும் இரத்தினபுரி வீதி ஊடாகவும் சிவனொளிபாத மலைக்கு செல்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

பருவகாலம் இல்லாத காலப்பகு தியில் , சிவனொளிபாத மலைக்கு வருகை தரும் போது, உரிய நிறுவ னங்களின் அனுமதி யைப் பெற்று நல்லதண்ணி மற்றும் இரத்தினபுரி பொலிஸ் நிலையங்களுக்கு அறி விக்க வேண்டும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

அதேநேரம் சிவனொளிபாத மலை பகுதியில் இடையிடையே பலத்த மழை பெய்து வருவதாலும், அங்கு செல்லும் படிகளில் பாரிய நீரோடை ஓடுவதாலும் ஸ்ரீ சிவனொளிபாத மலைக்கு செல்வது ஆபத்தானது என நுவரெலியா மாவட்ட செயலா ளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

O/L, A/L முடித்த...

உடனடியாக ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுட்டிக்காட் டியுள்ளார்.

எதிர்காலத்தில் நடைபெற வுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி நெறிகள் பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர் ஆரம் பிக்கப்படும் எனவும் அவர் தெரி வித்துள்ளார். கல்விப்பொதுத் தராத சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் களில் 50 சதவீதத்துக்கும் அதிக மானோர் இந்தப் பாடநெறிகளில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப் படுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

ஜேர்மனுக்கு...

பொருளாதார சவால்களுக்கு தீர் வுகாண்பதற்கான உயர்மட்ட முன் னெடுப்பான “பேர்லின் குளோபல்” மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி கடந்த புதன்கிழமை அதிகாலை ஜேர்மனுக்கு பயணமா னார். சர்வதேச நாடுகளின் தலைவர் களின் பங்கேற்புடன் இந்த மாநாடு செப்டெம்பர் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் ஜேர்மனியின் பேர்லின் நகரில் இடம்பெற்றது.

இந்த நிலையில் குறித்த மாநாடு நிறைவடைந்ததை அடுத்து தமது ஜேர்மன் விஜயத்தை நிறைவு செய்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடு திரும்பினார்.

மாலைதீவின்...

இருதரப்பு உறவுகளை பலதரப்பு கூட்டுச் செயன்முறைகளாக பலப் படுத்திக்கொள்ளவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது விருப்பம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம் மற்றும் முதலீட் டுத் துறைகளில் இருதரப்பு உற வுகளை பலப்படுத்திக்கொள்வது தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன் போது வலியு றுத்தியுள்ளார்.

புதிய ஜனாதிபதியின் ஆட்சியில் மாலை தீவிற்கு சுபீட்சம் கிட்டும் என்ற எதிர்பார்ப்புடன் அந்நாட் டின் புதிய அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். மாலைதீவு ஜனா திபதியுடனான இந்த தொலைபேசி உரையாடலின்போது, முன்னாள் மாலைதீவு ஜனாதிபதி இப்ரா ஹீம் மொஹமத் சோலி மற்றும் முன்னாள் ஜனாதிபதியும் தற்போ தைய சபாநாயகருமான மொஹமட் நசீட்டும் உடனிருந்துள்ளனர்.

இரண்டாம்....

அத்துடன் இரண்டாவது தவ ணையாக 300 மில்லியன் அமெரிக் கன் டொலர் நாட்டுக்குக் கிடைக்க வேண்டியுள்ளது.

இந்த கடன் ஒத்துழைப்பு முழு மையாக நாட்டுக்கு கிடைக்கப் பெற்ற பின்னர் சர்வதேச ரீதியில் கடன் வழங்கும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறு வனங்கள் மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் இலங்கைக்கான தமது கடன் உதவிகளை அதிகரிக் கும். அதேவேளை, புதிதாக சர்வ தேச முதலீட்டாளர்கள் அதிக நம்பிக் கையுடன் நாட்டுக்கு வருகை தந்து முதலீடுகளை மேற்கொள்வர். இந்த அனைத்து செயற்பாடுகள் மூலமாக நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சிய டைவதுகள் நாடு சிறந்த முன்னேற்ற மடையும் என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை வெளியிட்டுள் ளார்.

இந்திய கைத்தொழில்...

வைத்து சந்தித்து பிரியாவிடை பெற்றுக்கொண்டார்.

இந்த சந்திப்பின்போது உயர் ஸ் தானிகர் மொரகொட, அமைச்சரு டன் அவர் மேற்கொண்ட தொடர்ச் சியான உரையாடல்களை நினைவு கூர்ந்தார். மற்றும் அவர் டெல்லியில் பதவி வகித்த காலத்தில் வழங்கப் பட்ட ஆதரவிற்கு தனது பாராட்டுக் களையும் தெரிவித்துக்கொண்டார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார மற்றும் தொ ழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப் பந்தம் (ETCA) தொடர்பான பேச்சு வார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு அமைச்சரின் பங்களிப்புக்கு உயர்ஸ் தானிகர் நன்றி தெரிவித்தார். ETCA தொடர்பான அடுத்த (12வது) சுற்று பேச்சுவார்த்தை 2023 அக்டோபர் 30 முதல் நவம்பர் 01 வரை கொழும் பில் நடைபெறவுள்ளமை குறிப்பி டத்தக்கது.

'நிபா' வைரஸின்...

கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் இருந்து, இந்தியாவின் கேரள மாநி லத்தில் பாதிக்கப்பட்டவர்கள் கண் டுபிடிக்கத் தொடங்கினர். மேலும் பாதிக்கப்பட்டவர்களில் இருவர் இறந்ததாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், கடந்த 22 ஆம் திகதி முதல் இந்தியாவில் புதிதாக தொற்றுக்குள்ளான நபர் எவரும் அடையாளம் காணப்படவில்லை. மேலும் பாதிக்கப்பட்ட நோயாளி களுடன் தொடர்பில் இருந்ததாக சந்தேகிக்கப்படும் 700 க்கும் அதிக மானோர் தனிமைப்படுத்தப்பட்டுள் ளதாக தொற்றுநோயியல் துறை தெரி வித்துள்ளது.

நிபா வைரஸ் பரவுவதைக் கட்டுப் படுத்த இந்தியாவில் அமுல்படுத் தப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக நோய் பரவல் குறைக்கப் பட்டுள்ளதாகவும், அதனால் இலங் கைக்கான ஆபத்து மிகவும் குறைவு எனவும் தொற்றுநோயியல் திணைக் களம் வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் அச்சப் பட தேவையில்லை என சுகாதார அமைச்சும் அறிவித்துள்ளது.

தற்போதைய நிலைமையை உன் னிப்பாக அவதானித்து வருவதால், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவு றுத்தப்படும் என தொற்றுநோயியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அக்டோபர்...

மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனினும் நேற்று ஞாயிற்றுக்கி ழமை என்பதால் விலை திருத்தம் இன்று முதல் அமுல்படுத்தப்பட வுள்ளது.

விலை சூத்திரத்தின்படி, கடந்த மாதம் எரிபொருள் விலையில் குறிப் பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டது. இதேவேளை, இந்த மாதத்திற்கான எரிவாயு விலை திருத்தமும் ஒக் டோபர் 4ஆம் திகதி அறிவிக்கப்படும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித் துள்ளது. உலக சந்தையில் எரிவாயு விலைக்கு ஏற்ப இந்த விலை திருத் தத்தில் எரிவாயுவின் விலையில் சிறிது அதிகரிப்பு ஏற்படும் என பேச் சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த விலை திருத்தத்தின் போது 12.5 கிலோகிராம் எடை கொண்ட வீட்டு எரிவாயு சிலிண்டரின் விலை 145 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

கிணற்றிலிருந்து....

இச் சம்பவம் (30) மாலை கந்த ளாய் சூரியபுர பகுதியில் இடம் பெற்றுள்ளது.

குறித்த முதலை சுமார் ஏழு அடி நீளம் கொண்டவையாகுமென வன ஜீவராசி அதிகாரிகள் தெரிவித்துள் ளனர். காட்டுப் பகுதிக்கு நாவைப் பழம் பறிக்கச் சென்ற இளைஞர்கள் குழு முதலையை கண்டு சூரியபுர பொலிஸ் நிலையத்திற்கு தெரியப்ப டுத்தியதை அடுத்து, பொலிஸார் கந் தளாய் வனவிலங்கு அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளனர். பின்னர் வனவி லங்கு அதிகாரிகள் குறித்த இடத் திற்கு சென்று பாழடைந்த கிணற்றில் விழுந்துகிடந்த முதலையை மீட் டெடுத்து சுமார் பத்து கிலோமீட்டர் தூரத்தில் உள்ள மகாவலி ஆற்றில் விடப்பட்டதாக வனஜீவராசி அதிகா ரிகள் தெரிவித்துள்ளனர்.

கைதான...

படுகொலை செய்யப்பட்ட மூன்று இலங்கையர்களின் சடலங்கள் கடந்த மாதம் 22 ஆம் திகதி பொலி ஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன. கொலைச் சம்பவம் தொடர்பாக சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட வீட்டின் உரிமையாளரான தம்பதியி னரை பொலிஸார் கைது செய்துள்ள னர்.

கொல்லப்பட்ட மூவரில் தம் பதியரின் மகனும் அடங்குவதா கத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கொலைகள் தொடர்பிலான விசாரணைகள் நிறைவடையாத நிலையில், கைது செய்யப்பட்ட சந் தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாரால் விடுக் கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக மேலும் விளக்கமறியல் நீடிக்கப்பட் டுள்ளது.

சமையல்...

நிறுவனமானது சமையல் எரிவா யுவின் விலைகளில் திருத்தங்களை மேற்கொண்டதுடன் அதற்கிணங்க 12 .5 கிலோகிராம் எடைகொண்ட சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை 145 ரூபாவால் அதிக ரித்திருந்தது. எவ்வாறெனினும் இம்முறை உலகச்சந்தையில் நிலவும் சமையல் எரிவாயுவின் விலை அதிக ரிப்புக்கு ஏற்ப உள்நாட்டில் அதன் விலைகளில் சிறிய அளவில் அதிக ரிப்பொன்று மேற்கொள்ளப்படும் என்றும் அந்த நிறுவனத்தின் பேச்சா ளர் தெரிவித்துள்ளார்.

தென்மேல்...

களில் 75 மி.மீ. வரையான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சியும் அநுராதபுரம் மாவட்டத்தில் சிறித ளவில் மழை பெய்யும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப்பகுதிகளிலும் வடக்கு, வட மத்திய மற்றும் வடமேல் மாகா ணங்களிலும் திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட் டங்களிலும் அவ்வப்போது மணித் தியாலத்துக்கு 4050 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என எதிர் பார்க்கப்படுகின்றது. அம்பாறை, மட்டக்களப்பு, பதுளை மாவட்டங் களில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்ப டுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிர தேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்ப டக்கூடிய பாதிப்புகளை குறைத் துக்கொள்ள தேவையான முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார் கள். இதேவேளை, மழையுட னான வானிலை தொடர்வதால், நாட்டின் 08 மாவட்டங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த மண்சரிவு எச்ச ரிக்கை அறிவிப்பு மேலும் நீடிக்கப் பட்டுள்ளது.

6 கோடி ரூபா...

மேற்படி கிராமிய வங்கி நகரத் திலிருந்து சற்று தூரமாக கிராமத் தில் இயங்கி வருவதாகவும் அங்கு முகாமையாளர் உட்பட நான்கு பணியாளர்களே கடமையில் உள் ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாக பொலிசார் தெரி வித்துள்ளனர்.

நீண்ட வார இறுதி விடுமுறையை இலக்காகக் கொண்டே மேற்படி திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள் ளதாக விசாரணைகள் மூலம் தெரிய வருகின்றது.

அந்த கிராமிய வங்கியில் உள்ள சிறிய ஜன்னலை உடைத்து அங்கி ருந்த இரும்பு கிரில்லை கிரைண் டர் மூலம் வெட்டி திருடர்கள் உள்ளே நுழைந்துள்ளதாகவும் விசா ரணைகள் மூலம் தெரிய வருவதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பெரும்பாலும் தனி ஒருவரே இந்த திருட்டை மேற்கொண்டிருக்கலாம் என பொலிசார் நம்பிக்கை வெளி யிட்டுள்ளனர்.

அத்துடன் தங்க நகைகள் பாது காக்கப்பட்டிருந்த பெட்டகமும் அந்த கிரைண்டர் மூலமே வெட் டப்பட்டுள்ளது. இந்த முறைமை யிலேயே கடந்த வருடத்திலிருந்து தொடர்ச்சியாக நாடளாவிய ரீதியில் தபால் அலுவலகங்கள் சிலவற்றில் இவ்வாறு பெட்டகங்கள் உடைக்கப் பட்டு பணம் மற்றும் முத்திரைகள் களவாடப்பட்டிருந்தன.

குறித்த கிராமிய வங்கியின் தங்க நகை பாதுகாப்பு பெட்டகத்தில் 26 பகுதிகள் காணப்படுவதுடன் அதில் ஏழு பகுதிகளே உடைக்கப்பட்டு 6 கோடி ரூபாவுக்கும் அதிக பெறும தியான தங்க நகைகள் களவாடப் பட்டுள்ளன. ஏனைய அனைத்து பகுதிகளையும் உடைத்து தங்க நகைகள் களவாடப்பட்டிருக்குமா னால் அவை இதனை விட இரண்டு மூன்று மடங்கு அதிகமாக காணப் பட்டிருக்கும் என்றும்

பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்த திருட்டை மேற்கொண் டுள்ள நபர்கள் அங்கு பொருத்தப் பட்டிருந்த சிசிடி கெமராவின் ஒளிப் பதிவு உபகரணத்தையும் எடுத்துச் சென்றுள்ளதாக பொலிசார் தெரிவித் துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை பல பொலிஸ் குழுக்கள் மேற்கொண்டு வருவதா கவும் பொலிசார் மேலும் தெரிவித் துள்ளனர்.

பொலிஸார்...

நீதிபதிக்கு காணப்பட்ட உயிரச்சுறுத் தல் மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் சம்பந்தமான முழுமையான விசார ணைகளை தற்போது பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். இந்த விசாரணை களுக்கு புலனாய்வுப் பிரிவினரின் தக வல்களும் பயன்படுத்தப்படவுள்ளன.

விரைவில் முழுமையான அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள் ளது என்றார்.

8 மாவட்டங்களின்...

30 பிரதேச செயலாளர் பிரிவுக ளுக்கே இந்த மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்த நிறுவனம் தெரிவித் துள்ளது.

ஏற்கனவே ஐந்து மாவட்டங்க ளில் பல்வேறு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் நேற்றைய தினம் 8 மாவட்டங்களைச் சேர்ந்த 30 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்த நிறு வனத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். அத்துடன் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்களில் 316 வீடு களும் நான்கு வர்த்தக நிலையங் களும் சேதமடைந்ததுடன் 1,275 குடும்பங்களைச் சேர்ந்த 5551 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இரத்தினபுரி, களுத்துறை மற்றும் மாத்தறை மாவட்டங்களே அதிக ளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிலையும் தெரிவித்துள்ளது.

ப்ளாஸ்டிக்...

அறிவித்த லுக்கமைய, ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தக்கூடிய உறிஞ்சு குழாய்கள் (ஸ்ட்ரோவ்), கத்திகள் கரண்டிகள், முள்ளுக்க ரண்டிகள், தட்டுகள், கோப்பை கள், ப்ளாஸ்டிக் மாலைகள் மற்றும் இடியப்பத் தட்டுகள் போன்ற பொருட்களை இறக்குமதி செய்தல் விற்பனை செய்தல், இலவசமாக அல்லது கண்காட்சிக்காக வழங் குதல் என்பன தடை செய்யப்பட் டுள்ளன.

இந்தநிலையில், குறித்த வர்த்த மானி அறிவித்தலை மீறி செயற் படும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய சுற்றாடல் அதிகாரச் சபையின் தலைவர் சுபுன். எஸ். பத் திரகே தெரிவித்துள்ளார்.

குறித்த நடவடிக்கை அமுல்படுத் தப்பட்டதன் பின்னர், இன்று முதல் சுற்றிவளைப்பு நடவடிக்கைக ளும் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிரிக்கெட்...

மற்றும் ரகித ராஜபக்ஷ ஆகியோர் இந்த குழுவில் உள்ளடங்குகின்ற னர். சர்வதேச மற்றும் தேசிய கிரிக் கெட் சபைகளைக் கண்காணித்தல், தொடர்பு கொள்ளல், ஒருங்கிணைத் தல் தொடர்பான பொறுப்புகள் குறித்த குழுவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு விழா!

யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நிறுவப்பட்டு நூறு வருடங்கள் நிறைவடைந்ததனை குறிக்கும் வகையில் கல்லூரித்தின விழா (01) கலாசாலையில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இ.இளங்கோவன் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக கலாசாலையின் முன்னாள் அதிபர்களான வே.கா.கணபதிப் பிள்ளை , வீ.கருணலிங்கமும் கௌரவ விருந்தினராக நீர்வேலி கரந்தன் இராமுப் பிள்ளை வித்தியாலய முதல்வர் சாந்தனி வாகீசன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாடுகளை தொடர்ந்து நூறு ஆண்டுகளை வெளிப்படுத்தும் வகையில் நூறு நிறைகுடங்கள் கொடிகள் ஆலவட்டத்துடன் பண்பாட்டு பேரணி இடம்பெற்றது.

தொடர்ந்து ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நூற்றாண்டு விழா ஆரம்பமானது. நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கேக் வெட்டப்பட்டு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அதனை தொடர்ந்து விருந்தினர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கலாசாலையினால் வெளியிடப்படும் நூலான காலாதீபம் நூலும் வெளியிடப்பட்டது. நூற்றாண்டு விழாவின் சிறப்பு நிகழ்வாக கலாசாலையின் ஓய்வுநிலை பிரதி அதிபரான பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு எழுதிய கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பற்றிய சிறப்பு ஆய்வான "வடக்கின் ஆசிரியர் கலாசாலை" எனும் நூலும் வெளியிடப்பட்டது. இந்நூலுக்கான கருத்துரையினை கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளரும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ ஆலோசகருமான சரா.புவனேஸ்வரன் நிகழ்த்தினார். கலாசாலை கீதத்துடன் விழா நிறைவுபெற்றது.

நந்திக்கடலில் வீழ்ந்த இளைஞன் உயிரிழப்பு

ஓமந்தை விஷேட நிருபர்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச எல்லைக்குட்பட்ட நந்திக்கடல் பகுதியில் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுக் (01) காலை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மந்துவில் பகுதியினைச் சேர்ந்த 33 வயதுடைய தர்மராசா நிசாந்தன் என்ற இளைஞன் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டு சென்ற நிலையில் நந்திக்கடல் பகுதியில் மீட்கப்பட்டுள்ளார்.கோயிலுக்கு முன்னால் உள்ள நந்திக்கடலில் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டு புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

வத்தளை மாணிக்கவாசகர் அறப்பணி மன்றத்தினர் "ஆலய வழிபாட்டு செயல்முறை" பயிற்சிநெறி நிகழ்வொன்றை கொச்சிக்கடை அருள்மிகு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் சைவப்புலவர் சித்தாந்த செம்மணி செ.நவநீதகுமாரின் தலைமையில் நடத்தினர். திருமறை நெறிச்செல்வர் மரவன்புலோ செல்லம் அம்பலவாணர் மற்றும் அறநெறி ஆலோசகர் திருவாளர் ச.சன்முகப்பிரபாவும் இணைந்து மாணிக்கவாசகர் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கும் புபுதுகம அறநெறி பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இக் கற்கை நெறியினை பயிற்றுவித்தார்கள்.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்டம்

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் 2023/2024 காலப் பகுதியில் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP) ஊடாக மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கான இறுதிக்கட்ட கலந்துரையாடல் (30/09) சனிக்கிழமை சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் நகர சபை செயலாளர் தலைமையில் பொதுமக்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

இதன்போது நுணாவில் கிழக்கில் சிறுவர் பூங்கா அமைத்தல், உள்ளக விளையாட்டு மைதானம் அமைத்தல், மலக்கழிவு மீள் சுழற்சி பொறிமுறை அமைத்தல்,சாவகச்சேரி பொது விளையாட்டு மைதான புனரமைப்பு,நகர வடிகால மைப்பை ஏற்படுத்தல்,கலி பவுசர் சேவையை வழங்கல், தீயணைப்புப் பிரிவு அமைத்தல்,முன்பள்ளிச் சிறார்களுக்கு சத்துமா வழங்கல், பொழுதுபோக்கு மையம் நிறுவுதல்,உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான விற்பனை நிலையம் அமைத்தல்,பாரம்பரிய உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான நிலையம் அமைத்தல் உள்ளிட்ட 23திட்டங்கள் கடந்த காலத்தில் மக்களால் முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டங்களாக அடையாளப்படுத்தப்பட்டு அவற்றில் எந்த வேலைத்திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்வது என மக்களுடைய தெரிவுக்காக வாக்கெடுப்பிற்கு விடப்பட்டிருந்தது.

உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் நிதி உதவியில் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ள மேற்படி அபிவிருத்தித் திட்டத்தில் வீதி அபிவிருத்தியை தவிர்க்குமாறு உலக வங்கி அறிவுறுத்தியமையால் வீதி அபிவிருத்தி தவிர்ந்த ஏனைய பொருளாதாரத்தை வளர்க்கக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டம் ஊடாக சாவகச்சேரி நகரசபைக்கு இரண்டு பிரிவுகளாக 71 மில்லியன் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், வாக்கெடுப்பிற்கான இறுதி முடிவுகள் எதிர்வரும் ஆறாம் திகதி வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மக்களின் வாக்குகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு உரிய திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

2023 ஒக்டோபர் 04ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 110,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

முதிர்வுக் காலம்	91 நாட்கள்	182 நாட்கள்	364 நாட்கள்	மொத்தம்
ஐஎஸ்ஐஎன்*	LKA09124A056	LKA18224D057	LKA36424J041	
முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.)	55,000	30,000	25,000	110,000

ஏல விற்பனைத் திகதி : 2023 ஒக்டோபர் 04
தீர்ப்பனவுத் திகதி : 2023 ஒக்டோபர் 06
வழங்கப்படும் திகதி : 2023 ஒக்டோபர் 06
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 ஒக்டோபர் 04, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.

அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிட்ட்	2206297
இலங்கை வங்கி	2541938
கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி	2317777
இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி	2332319
ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி	2639883
என்.எஸ்.பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிட்ட்	2425010
மக்கள் வங்கி	2206783
சம்பத் வங்கி பிஎல்சி	2305842
செலான் வங்கி பிஎல்சி	2456340
வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிட்ட்	2675096

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

என். டி. வை. சி. வீரசிங்க
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்

வழங்கும் அலுவலகம்:
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk

வாகனங்கள் விற்பனைக்கு

வாகன இல.	வகை	மாதிரி	வருடம்
கார்			
015 -0XXX	NISSAN	SUNNY	1983
018 -2XXX	MAZDA	E-BG3P	1989
CAG -0XXX	NISSAN	ZAA-ZE0 LEAF	2012
வேன்			
051 -7XXX	ISUZU	FARGO	1986
041 -8XXX	ISUZU	WFR 53	1988
052 -6XXX	TOYOTA	TOWNACE	1988
லொறி			
PX -1XXX	TATA	ACE EX2	2013
DAD -3XXX	DFSK	EQ1020DR	2016
டிப்பர்			
LM -8XXX	LANKA ASHOK LEYLAND 1616		2017
துவிச்சக்கர வண்டிகள்			
BIG -5XXX	HONDA	DIO SCV 110	2019
BJA -5XXX	TVS	NTORQ	2019
முச்சக்கர வண்டிகள்			
HM -7XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2003
HN -2XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2003
JB -6XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2004
JU -4XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2004
QA -3XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2005
QA -9XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2005
QD -8XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2006
QD -8XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2006
QF -3XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2006
QH -6XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2006
QJ -8XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2006
QV -1XXX	BAJAJ	BAJAJ 4S	2009
YB -7XXX	BAJAJ	AR4S-UG	2010
AAJ -1XXX	BAJAJ	RE205	2013
AAJ -6XXX	BAJAJ	RE 205	2013
AAQ -3XXX	BAJAJ	RE	2014
AAX -4XXX	BAJAJ	RE	2015

வாகன பரிசீலித்தல்களுக்கு:
மெர்கன்டைல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2023 ஒக்டோபர் 2ஆம், 3ஆம், 4ஆம் மற்றும் 5ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2023 ஒக்டோபர் 5ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

www.skillsadsl.com

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

Mercantile Investments and Finance PLC

தொடர்பு:
ஜானக்க - 071 1624559 / மொதிந - 071 9530350

மேல் மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வி.பி. கணேசன் ஞாகார்த்தமாக புலமைப்பரிசில் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு கொழும்பு கலைமகள் வித்தியாலயத்தில் அண்மையில் நடத்தப்பட்டது. இதன்போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், அமரர் வி.பி. கணேசன் ஞாபகார்த்த கேடயங்களை வழங்கி சமூக சேவையாளர்களை கௌரவித்தார். மன்றத் தலைவர் லயன் ரவிந்திரன், பொதுச்செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம், நிர்வாகச் செயலாளர் திருமதி ஆ. புவனேஸ்வரி ஆகியோர் அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம்.

ஜாதிக லொதரய மண்டலய தேசிய லொத்தர் சபை National Lotteries Board | சனி 2023.09.30 | உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத் சீட்டிழுப்பு இலக்கம் 5253 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,809,528.00
ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கங்கள் 1 0 5 2 9 6

கொவிசெத சீட்டிழுப்பு இலக்கம் 3495 | சீட்டிழுப்பு திகதி 2023.09.30 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,513,804.80
ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கங்கள் 02 15 39 74 | விசேட எழுத்து U | இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 51081

Mega Power சீட்டிழுப்பு இலக்கம் 1601 2023.09.30 | 07900 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.409,220,340.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 | அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து J | சுப்பர் இலக்கம் 03 | வெற்றி இலக்கங்கள் 50 51 68 74

லக்கி 7 திகதி 2023.09.30 | சீட்டிழுப்பு இலக்கம் 0079 | வெற்றி இலக்கினம் கன்னி | L7 இலக்கம் 1 3 | வெற்றி இலக்கங்கள் 4 9 7 8 4 7 | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.11,233,149.92

மஹாஜன திகதி 2023.09.30 | சீட்டிழுப்பு இலக்கம் 562 | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,048,440.80
வெற்றி இலக்கினம் மீனம் | வெற்றி இலக்கங்கள் 16 43 47 62 | விசேட இலக்கினம் மீனம்

தன நிதானய சீட்டிழுப்பு இலக்கம் 1283 2023.09.30 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 113,097,796.00
ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கங்கள் 28 37 47 65 | விசேட எழுத்து O | இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 03437

ஜாதிக லொதரய மண்டலய தேசிய லொத்தர் சபை National Lotteries Board | வெள்ளி 2023.09.29 | உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத் சீட்டிழுப்பு இலக்கம் 5252 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,757,352.00
ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கங்கள் 7 6 3 9 1 1

கொவிசெத சீட்டிழுப்பு இலக்கம் 3494 | சீட்டிழுப்பு திகதி 2023.09.29 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,513,804.80
ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கங்கள் 19 45 72 76 | விசேட எழுத்து X | இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 32897

Mega Power சீட்டிழுப்பு இலக்கம் 1600 2023.09.29 | 74244 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 409,220,340.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 | அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து D | சுப்பர் இலக்கம் 15 | வெற்றி இலக்கங்கள் 13 44 46 79

லக்கி 7 திகதி 2023.09.29 | சீட்டிழுப்பு இலக்கம் 0078 | வெற்றி இலக்கினம் கடகம் | L7 இலக்கம் 1 3 | வெற்றி இலக்கங்கள் 6 6 2 6 8 0 | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.11,233,149.92

மஹாஜன திகதி 2023.09.29 | சீட்டிழுப்பு இலக்கம் 561 | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,042,454.40
வெற்றி இலக்கினம் கும்பம் | வெற்றி இலக்கங்கள் 04 15 41 47 | விசேட இலக்கினம் கும்பம்

தன நிதானய சீட்டிழுப்பு இலக்கம் 1282 2023.09.29 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 112,860,583.20
ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கங்கள் 36 67 68 76 | விசேட எழுத்து J | இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 43836

வடதெனிய கல்வி அபிவிருத்தி சங்க ஏற்பாட்டில்

சா/த, உயர்தரம் சித்தியடைந்த மாணவரும் பல்கலைக்கழகம் தெரிவானோரும் கௌரவிப்பு

இக்பால் அலி

வடதெனிய கல்வி அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் வடதெனிய பிரதேசத்தில்; க.பொ.த சாதாரணம், உயர் தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவ மாணவிகளையும், மற்றும் பல்கலைக்கழகம் தெரிவான மாணவ மாணவிகளைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு வடதெனிய கிரீன் விவ் ரிசப்சன்ஸ்ன்ட் மண்டபத்தில்தலைவர் ஏ.எச்.எம். அனஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் உனைஸ் எம். ஆரிப் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதன்போது விசேட அம்சமாக வடதெனிய பிரதேசத்தில் மருத்துவத் துறையில் ரஜரட்ட பல்கலைக் கழகம் தெரிவு செய்யப்பட்டு வைத்தியத் துறைப் பட்டத்தை நிறைவு செய்த முதல் வைத்தியர் இல்மா தாசிமை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் அதேவேளையில் வடதெனிய பிரதேசத்தில் 35 வருட காலமாக வைத்திய சேவையாற்றி வருகின்ற வைத்தியர் டாக்டர் விஜே சிங்கவையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது வடதெனிய முஹியித்தீன் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் அல்ஹாஜ். எம். ஐ. எம். ஹாரிஸ், வடதெனிய முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபர் ஏ. ஏ. சி. எம். முனீர் மற்றும் ஊர் முக்கிய பிரமுகர்கள், உலமாக்கள், தனவந்தர்கள், முன்னாள் அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் உனைஸ். எம். ஆரிப் உரையாற்றும் போது; வடதெனிய கல்வி அபிவிருத்தி சங்கம் வடதெனிய பிரதேச மக்களின் கல்வித் தேவையை மிகவும் சிறந்த முறையில் நிறைவேற்றி வருகின்றது என்று அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அறிவியல் ரீதியாக வடதெனிய கிராமம் கூடிய சீக்கரம் மாற்றத்தைக் காணும் என்பதில் எதுவிதமான சந்தேகமுமில்லை. க. பொ. த உயர் தரப் பரீட்சை என்பது வெறுமனே தனியார் வகுப்புக்களுக்குச் சென்று மட்டும் படித்து பரீட்சையில் சித்தியடைய முடியாது. அதை அனுபவம் பெற்ற ஒருவராக இருந்து கூறுகின்றேன். என்னுடைய பிள்ளையினை பாடசாலையில் இருந்து ஒரு நாள் கூட விடுமுறை எடுக்க விட வில்லை. இம்முறை மருத்துவ பீடத்திற்குத் தெரிவாகி இருக்கிறார். அவர் ஒரு போதும் விடுமுறை எடுக்க மாட்டார். பாடசாலைகளுக்கும் செல்லுங்கள், தனியார் வகுப்புக்களுக்கும் செல்லுங்கள். அதில் எந்த விதமான ஆட்சேபனையுமில்லை. வேண்டாம் என்று கூறவில்லை. பாடசாலைகளில்தான் பிள்ளைகளுடைய ஒழுக்கம் கற்பிக்கப்படுகிறது. பிள்ளைகள் புத்தகத்தை வாசித்து பரீட்சையில் சித்தியடைவதல்ல வாழ்க்கை. அதற்கப்பாலும் ஒரு வாழ்க்கை முறை இருக்கின்றது.

ஒரு உள்ளார்ந்த திறன்கள், செயற்பாடுகள் வெளிக்கொணர்தல் வேண்டும். அதற்கான மேடை கிடைக்காது. தனியார் வகுப்பில் விளையாட்டு மைதானம் இல்லை. நிறைய ஆசிரியர்களைச் சந்திக்க வாய்பில்லை. அவர்களுடைய ஆலோசனை கிடைக்காது. தனியார் வகுப்பில் படிப்பு மட்டும்தான். நல்ல மனப்பாங்கு கிடைக்காது, நல்ல ஒழுக்கம் கிடைக்காது. நல்ல வழி கிடைக்காது. திறன் கிடைக்காது. தனியார் வகுப்புக்களை நம்பி எந்தக் காரணத்தைக் கொண்டும் பாடசாலைகளில் நடைபெறும் வகுப்புக்களை வீணடிக்கச் செய்து விடாதீர்கள், தமிழ் தினப் போட்டிகள், ஆங்கில மொழி தினப் போட்டிகள், மீலாத் தின போட்டிகள் என எல்லா நிகழ்வுகளிலும் மாணவர்கள் கலந்து கொள்ள வேண்டும்.

இங்கு இரு பிள்ளைகள் அறிவிப்பாளர்களாக பங்காற்றினார்கள். அவர்களுடைய திறமையைப் பார்க்கின்ற போது ஓர் அறிவிப்பாளர்களாக வருவதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இவை தனியார் வகுப்புக்கள் மூலம் ஏற்படுத்தப் படுவதில்லை. இவை எல்லாம் பாடசாலை கல்வி மூலம் தான் கிடைக்கின்றன. பல்கலைக்கழகம் சென்று தங்களுடைய திறமைகளை வெளிக்காட்டி தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்வதாக இருந்தால் அதற்குரிய அத்திவாரம் பாடசாலைகளில்தான் கிடைக்கும். ஒரு மாணவன் பல்கலைக்கழம் தெரிவு செய்யப்பட்டு செல்லும் போது பல்துறை சார்ந்த ஆளுமைகளைக் கொண்ட மாணவனாக ஆக்கி அனுப்பி வைத்தல் வேண்டும். இது பாடசாலையின் கட்டாயக் கடமை. இதில் ஒவ்வொரு பெற்றோர்களும் மிகுந்த கவனம் செலுத்துதல் வேண்டும்.

சமூகத்தை வழிநடத்தக் கூடிய முழுமையான ஓர் ஆளுமைமிக்க மனிதராக வர வேண்டும். சமூகத்தின் தலைவராக வருவதற்குரிய ஆளுமை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான ஒரு சிறந்த களம்தான் பல்கலைக்கழகம். அங்கு சென்று படித்து விட்டு வெறும் காகிதத்தை மட்டும் தூக்கிக் கொண்டு வர வேண்டாம். அதனை இப்போது ஒன் லைன் மூலமாகவும் செய்து பெற்றுக் கொள்ள இயலும். அதற்கப்பால் சென்று தம் ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கான சிறந்த இடம் பல்கலைக்கழகங்களாகும் என்பதை ஒவ்வொரு மாணவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

படிக்கின்ற போது தொழில் வாய்ப்புக்காக படிக்கின்றேன் என்ற எண்ணம் வருதல் வேண்டும். அது இல்லையெனில் நாங்கள் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை இழந்து விடுவோம். பல்கலைக்கழக வாழ்க்கையை கற்றலுக்காக மட்டுமல்ல மாணவர்களுடைய கனவாக இருக்கின்ற தொழிலை அடைவதற்காக அத்திவாரமாகக் கொள்ளுதல் வேண்டும் என்றார்.

வடதெனிய கல்வி அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் ஏ. எச். எம். அனஸ் தலைமையுரை நிகழ்த்திய போது; பெற்றோர்களுடைய பங்களிப்பு இல்லா விட்டால் பிள்ளைகள் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. எனவே கவனம் செலுத்தப்படுகிறது. கையடக்கத் தொலைபேசி இல்லாமல் படிக்க முடியாது என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பெற்றோர்களாகிய நாங்கள் பிள்ளைகள் என்ன செய்கிறார்கள். அவர்கள் என்ன படிக்கிறார்கள் என்பதை அவதானித்தல் வேண்டும். இன்று இப்பிரதேசத்தில் இருந்து நிறையப் பிள்ளைகள் பல்கலைக்கழகம் செல்வதற்கான சந்தர்ப்பத்தையும் க. பொ. த சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று உயர் தரக் கல்வியினையும் மேற்கொள்ள வடதெனிய கல்வி அபிவிருத்திச் சங்கம் பெரும் பங்காற்றி வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்

வடதெனிய முஹியித்தீன் ஜம்ஆப் பள்ளிவாசலின் முன்னாள் தலைவர் வடதெனிய கல்வி அபிவிருத்தி சங்கத்தின் உப தலைவர் கியாஸ் ரவூப் உரையாற்றும் போது;

2019 இல் அனஸ் ஆசிரியர் வெட்ஸ் அமைப்பு ஆரம்பித்தாலும் அதற்கு முன்னர் ஐந்து வருடங்களாக ஊருக்கு கல்வியை வழங்க வேண்டும் என்ற விடயத்தில் தனிப்பட்ட ரீதியாக இயங்கி வந்துள்ளார்கள். அந்த அவர்களுடைய செயற்பாட்டினைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு மே மாதம் இந்த அமைப்பை புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. அதனைபெரியளவில் முன்னெடுப்பதற்காக ஆரம்பத்தில் பல தரப்பட்ட கூட்டங்களை நடத்தினோம். அதில் ஒரு கூட்டம் எனது வீட்டிலும் இடம்பெற்றது. இந்த அமைப்பில் 25 உறுப்பினர்கள் உள்ளார்கள். இதில் 19 பேர் வெளி நாடுகளில் பணிபுரிகின்றார்கள். மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பா,அமெரிக்கா, அவுஸ்ட்ரேலியா போன்ற நாடுகளில் பரந்துபட்ட உயர் நிலையில்; வாழ்ந்து வருகின்றனர். தம் பிரதேசத்தின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டதுதான் இந்த வெட்ஸ் என்னும் அமைப்பு ஆகும்.

இந்த அமைப்பு தம் பிரதேச பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்கு வறுமை தடையாக இருக்கக் கூடாது என்பதை கவனத்தைக் கொண்டு செயலாற்றி வருகிறது. சூம் ஊடாக தம் பிரதேசத்தின் கல்வி நிலவரம் குறித்து கலந்துரையாடல்கள் செய்வோம். அதற்கான பல திட்டங்களை மேற்கொண்டு செயற்பட்டு வருகின்றோம்.

தரம் 11 ஆம் ஆண்டுக்கான பிரத்தியேக வகுப்புக்களை நடத்தி வருகின்றோம். தரம் 10 ஆம் ஆண்டுப் பிள்ளைகளுக்கான பிரத்தியேக வகுப்புக்களை நடத்தி வருகின்றோம். எமது பள்ளிவாசலின் ஸகாத் நிதியின் மூலம் ஒவ்வொரு வருடமும் கல்விக்காக செலவு செய்யப்பட்டு வருகின்றது. அதேவேளையில் இவ்வருடம் 14 வறிய மாணவர்களின் கல்விக்காக மாதாந்தம் நிதி உதவியினை வழங்கி வருகிறார்கள்.

அந்த வகையில் இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காக பள்ளிவாசலின் பங்களிப்பு ஒரு புறம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் மாணவர்களின் பங்களிப்பு ஒத்துழைப்பு இருத்தல் வேண்டும் என்றார்.

மானுடவியல்

சுந்தரர்– சிவனின் அற்புதங்கள்

135

"சுந்தரர் விஷயமாக பேச வந்துள்ளேன்." என்றார் இறைவன். பரவையாரின் முகம் கோபத்தில் சிவந்தது. வாயில் கதவை படார் என்று சாத்திவிட்டாள். நடந்த சம்பவத்தை சுந்தரரிடம் சொன்னார் சிவபெருமான். நம்பியாரூரர் விடுவதாக இல்லை. "எனக்காக மறுபடியும் பேசுங்கள்." என்றார். "காலையில் பார்க்கலாம் இப்போது அமைதியாக சென்று உறங்கு. எல்லாம் நல்லபடியாக நடக்கும்." என்று சுந்தரரை சமாதானம் செய்தார் ஈசன். மறுநாள் காலை சிவபெருமான் பரவையார் வீட்டின் கதவை தட்டினார். கதவை திறந்து பார்த்த பரவை அதிர்ந்தாள். அவள் எதிரே சிவபெருமான். பரவை ஆனந்த கண்ணீருடன் இறைவனின் காலில் விழுந்து ஆசிப்பெற்றாள். பரவையாரின் முன் ஜென்ம சம்பவங்களை விவரித்தார் இறைவன். அனைத்தையும் உணர்ந்து சமாதானம் கொண்டாள். நேற்றும் வந்தது இறைவன் என்று அறியாமல் பிழை செய்தேன். மன்னிக்க வேண்டும் என்று வேண்டினாள். மன்னித்தார் இறைவன். பரவையார் மனம் மாறி சுந்தரருடன் இணைந்தார். இந்த அற்புத செய்தி ஊர் முழுவதும் தெரிந்தது. அப்போது ஏயர்கோன் கலிகாமன் என்பவருக்கும் இந்த செய்தி கிடைத்தது. எல்லோரும் அற்புதம் என்று போற்றிய சம்பவம் பெரும் சிவபக்தரான அவருக்கு மட்டும் ஆத்திரத்தை உண்டாக்கியது. சுந்தரனுக்காக சிவபெருமானையே தூது அனுப்பி தெருவில் நடக்க வைத்தானா? அய்யோ! என்ன கொடுமை இது? எவன் அவன் சுந்தரன்.? என்று ஆத்திரத்துடன் கூறிவந்தார். அவரின் கோபம் சுந்தரருக்கு தெரிவிக்கப்பட்டது. நம்பியாரூரர் மிக வருந்தினார். ஏயர்கோன் கலிகாமரை சந்திக்க விரும்பினார். அதற்கு ஒருவழியை சிவபெருமானே உண்டாக்கினார். ஏயர்கோன் கலிகாமருக்கு கடுமையான வயிற்று வலியை ஏற்படுத்தினார். துடித்து போனார் ஏயர்கோன். மருத்துவ மேதைகள் பலர் மருத்துவம் பார்த்தும் வயிற்று வலி தீரவில்லை. சிவபெருமானே இது என்ன சோதனை? என்று இறைவனின் முன்பாக கதறினார் ஏயர்கோன் கலிகாமர். அப்போது சிவபெருமான், அசரீரியாக "உனக்கு மருத்துவன் நம்பியாரூரன். அவன் மருந்து தந்தால் உன் நோய் தீரும்." என்றார். அதற்கு ஏயர்கோன், "அய்யனே! தங்களை தூது அனுப்பி அவமானப்பட வைத்த சுந்தரனால் என் நோய் தீரும் என்றால் அப்படிபட்ட உயிர் இந்த உடலுக்கு தேவையில்லை." என்றவாறு கத்தியால் தன்னை தானே குத்தி இறந்தார் ஏயர்கோன் கலிகாமர்.ஏயர்கோனின் பக்தியை எண்ணி மகிழ்ந்தார் சிவபெருமான். அச்சமயம் நம்பியாரூரர் ஏயர்கோனை சந்திக்க வந்திருந்தார். ஏயர்கோன் இறந்து போனார் என்று செய்தி கேட்டு கதறிய சுந்தரர் அவரின் உடலை தூக்கி தன் மடியில் வைத்து அழுதார். "ஒரு சிவபக்தன் உயிர் பிரிய நானே பெரும் காரணமானேனே! இனி நானும் உயிரோடிருந்து பயன் ஏது?" என்றவாறு ஏயர்கோன் குத்தி இறந்த அதே கத்தியை எடுத்து தம் உயிரையும் மாய்த்துக்கொள்ள எண்ணினார் சுந்தரர். உடனே சிவபெருமான் அங்கு தோன்றி, சுந்தரரை தடுத்தார். ஏயர்கோன் கலிகாமருக்கும் உயிர் தந்தார். நம்பியாரூரரின் பெருமையை உணர்ந்தார் ஏயர்கோன். "என் உயிர் பிரிந்ததை கண்டு துடித்து உன் உயிரையும் இழக்க துணிந்தாயே! உனக்காக இறைவன் தூது சென்றது நியாயமே" என்று நம்பியாரூரரை போற்றி மகிழந்தார். சிறந்த சிவபக்தர்களான நம்பியாரூரரையும் ஏயர்கோன் கலிகாமரையும் பெரிய புராணம் சுந்தரமூர்த்தி நாயனார் எனவும் ஏயர்கோன் கலிகாம நாயனார் எனுவும் புகழ்ந்துரைக்கிறது.

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

புரட்டாசி

புரட்டாசி. இது தமிழ் மாதங்களில் ஒன்று. 6வது மாதமாக இது வரும். சூரியன் கன்னி ராசியில் இருக்கும் நாட்களைத்தான் நாம் புரட்டாசி மாதம் என்கிறோம். இந்த மாதம், பிதுர்களுக்குரிய விடுதலை மாதமாகக் கருதப்படுகிறது.மறைந்த நம் முன்னோர், பிதுர் லோகத்தில் வசிப்பதாக ஐதீகம். சூரியன், கன்னி ராசிக்குள் புகுந்ததும், எமதர்மன் அவர்களை பூமிக்குச் செல்லும்படி உத்தரவிடுகிறார். அவர்களும் தங்கள் உறவுகளை நாடி, இங்கே வருகின்றனர்.

புரட்டாசி வளர்பிறை பிரதமையில் இருந்து அதாவது இருந்து அமாவாசை வரையான, 15 நாட்கள் அவர்கள் பூமியில் தங்குவர். இதையே, "மகாளய பட்சம்' என்பர்; "பட்சம்' என்றால், "15 நாட்கள்' எனப் பொருள். இந்த நாட்களில் நாம் தினமும் தர்ப்பணம் செய்து, அவர்களின் தாகத்தைத் தீர்க்க வேண்டும். தகுதியானவர்களுக்கு அன்னதானம் செய்ய வேண்டும். இந்த பட்சத்தில் வரும் பரணி, "மகாபரணி' என்றும், அஷ்டமியை, "மத்யாஷ்டமி' என்றும், திரயோ தசியை "கஜச்சாயை' என்றும் சொல்வர். இந்த மூன்று நாட்களுமே, பிதுர் வழிபாட்டுக்கு உகந்தவை. புரட்டாசி மாதத்தில் வரும் மகாளய அமாவாசையில் செய்யப்படும் பிதுர் பூஜை (இவ்வாண்டில் மற்ற அமாவாசைகளைக் காட்டிலும் அதிக பலன் தரும். மஹாலய விதிப்படி அந்தப் பதினாறு நாள்களும் பித்ருக் களுக்காக அன்ன சிராத்தம் செய்ய வேண்டும், இயன்றவர்கள் பொன் முதலிய பொருள்களைத் தகுந்தவர்களுக்குத் தானமாக வழங்கலாம். புரட்டாசி மாதம் முழுவதும் விரதம் காத்தும், தூய காய்கறி தானிய உணவு வகைகளையே உண்டும், துளசி தீர்த்தம் பருகியும், அவன் புகழ்பாடும் நூல்களைப் படித்தும், பாராயணம் செய்தும் போற்ற வேண்டும். சிலர் புரட்டாசி வரும் எல்லா சனிக்கிழமைகளிலும், அல்லது ஏதேனும் ஒரு சனிக்கிழமையன்றும் படையல் படைத்துச் சிறப்பாக வழிபடுவதுண்டு. பராசக்திக்குரிய பூஜை மாதமும் இதுவே. நவராத்திரி பூஜை இம்மாதத்தில் கொண்டாடப்படுகிறது. புரட்டாசி மாதம் முழுவதும் ஆன்மிக வழிபாடுகள் நிறைந்த மாதம் ஆகும். எனவே இம்மாதத்தில், தவறாமல் வழிபாடுகளைச் செய்து, தெய்வங்கள் மற்றும் முன்னோர்களின் நல்லருளும், நல்லாசியும் பெறுவோம்.

புண்ணியம் தரும் புரட்டாசி மாதம்

'பொன்னுருகக் காய்ந்து மண்ணுருகப் பெய்யும் புரட்டாசியில்' என்பார்கள். அதாவது, புரட்டாசி மாதத்தில் பகல் பொழுதினில் தங்கம் உருகும் அளவிற்கு கடுமையான வெயில் காய்ந்து, இரவினில் மண் உருகி வழிந்தோடும் அளவில் நல்ல மழை பெய்யும் என்பது இதன் பொருள். இந்த மாதம் முழுவதும் சூரியன் கன்னி ராசியில் சஞ்சரிப்பதால் இதனை கன்னியா மாதம் என்றும் அழைப்பர். புரட்டாசி என்ற வார்த்தையைக் கேட்கும் போதே நம் கண் முன் தோன்றுவது பெருமாளின் திருவுருவமே. புரட்டாசி மாதம் முழுவதும் பெருமாளுக்கு விரதம் இருப்போரும் உண்டு. நவகிரகங்களில் மகாவிஷ்ணுவின் அம்சமாக உருவானவர் புத பகவான். புதன் கிரகம் உச்ச பலம் பெறுவது கன்னி ராசியில். எனவேதான் சூரியன் கன்னி ராசியில் சஞ்சரிக்கும் புரட்டாசி, பெருமாளுக்கு உரிய மாதம் என பெரியவர்கள் வகுத்திருக்கிறார்கள். அதோடு பெரும்பாலும் புரட்டாசி மாதத்தில் கன்னி ராசியில் சூரியனோடு புதனும் இணைந்திருப்பார். சூரியனுக்கு உரிய பிரத்யதி தேவதை பசுபதி என்றழைக்கப்படும் சிவபெருமான். புதனுக்கு உரிய பிரத்யதி தேவதை நாராயணன். இவர்கள் இருவரும் தெய்வீக மூலையாக கருதப்படும் கன்னி மூலையில் இணைவது சங்கரநாராயணர் இணைவாகக் கருதப்படுகிறது. சூரியநாராயண ஸ்வாமி என்று சூரியன் பெயர் பெற்ற காரணமும் இதுவே.

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் அறநெறி பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் ஆடற்கலைப் போட்டி

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் அறநெறி பாடசாலைகளுக்கு இடையே வருடாந்தம் நடத்தும் ஆடற்கலைப் போட்டியை இம்முறையும் நடத்தவுள்ளது.

ஆடற்கலைப் போட்டியில் மேடையேற்றப்படும் நடனங்கள் அனைத்தும் 6 (ஆறு) நிமிடங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

இந்தப் போட்டியில் பங்குபற்றுகின்ற அனைத்து மாணவ மாணவிகளும் 8 (எட்டு) வயதுக்கும் 15 (பதினைந்து) வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும். 15 வயதுக்கு ஒரு நாள் மேற்பட்டவராக இருந்தாலும் அவருக்கு பங்குபற்ற வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது.

போட்டியில் பங்குபற்றுகின்ற அனைத்து மாணவ மாணவிகளினதும் பிறப்புச் சான்றிதழின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.

இந்தப் போட்டியில் முதல், இரண்டாம் சுற்றுப் போட்டிக்கு நீங்கள் விரும்பிய கிராமிய, பாரம்பரிய நடனங்கள் எதுவும் ஆடலாம். உதாரணமாக கரகம், காவடி, செம்பு, ஒயிலாட்டம், மயிலாட்டம் எதுவும் ஆடலாம்.

இறுதிப் போட்டிக்கு நாம் வழங்குகின்ற கிராமிய நடனம் தான் ஆடவேண்டும். இறுதிப் போட்டி நடைபெறும் தினத்துக்கு 14 நாட்களுக்கு முன் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகிய அறநெறிப் பாடசாலைகளுக்கு என்ன நடனம் ஆட வேண்டும் என்பதை நாம் அறியத் தருவோம். இறுதிப் போட்டி கொழும்பில் தான் நடைபெறும்.

கிராமியப் பாடல்கள் தவிர்ந்த சினிமாப் பாடல்களுக்கு ஆட முடியாது. கிராமிய சினிமாப் பாடல்களுக்கு ஆடலாம்.

கிராமிய இசைக்கருவிகள் பயன்படுத்தலாம். நீங்கள் என்ன இசைக்கருவிகள் பயன் படுத்த போகின்றீர்கள் என்பதை எமக்கு விண்ணப்பத்துடன் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

இதில் பங்குபற்றுகின்ற அனைத்து மாணவ மாணவிகளும் கட்டாயம் அறநெறிப் பாடசாலைகளில் படிக்கின்றவர்களாக இருக்க வேண்டும். அறநெறிப் பாடசாலைகளில் படிக்காத மாணவ, மாணவிகள் பங்கு பற்றினால் அந்த அறநெறி பாடசாலை இந்தப் போட்டியில் இருந்து விலக்கப்படும்.

அகில இலங்கை ரீதியாக நடத்தப்படும் இப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெறும் அறநெறி பாடசாலைக்கு ஒரு இலட்சம் ரூபா (1,00000/) பணப் பரிசு வழங்கப்படும்.

இரண்டாம் இடத்தைப் பெறும் அறநெறி பாடசாலைக்கு 50 (ஐம்பது) ஆயிரம் ரூபா பணப்பரிசு வழங்கப்படும்.

மூன்றாம் இடத்தைப் பெறும் அறநெறி பாடசாலைக்கு 30 (முப்பது) ஆயிரம் ரூபா பணப்பரிசு வழங்கப்படும்.

இது தவிர இறுதிச் சுற்றுப் போட்டிக்குத் தெரிவாகி முதல் மூன்று இடங்களைப் பெறாத அனைத்து அறநெறிப் பாடசாலைக்கும் 10 (பத்து) ஆயிரம் ரூபா வீதம் ஆறுதல் பரிசாக வழங்கப்படும்.

கடந்த வருடத்தைப் போன்று இந்தப் போட்டியில் பங்குபற்றுகின்ற அனைத்து மாணவ மாணவிகளுக்கும் சான்றிதழ் வழங்கப்படும். நடனத்தை பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட கால எல்லைக்குப் பின் அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.

இப்போட்டியில் பங்குபற்றுகின்ற அறநெறிப் பாடசாலைகள் இரண்டு நடனங்களை கற்றிருக்க வேண்டும்.

இப்போட்டி முதலில் மாவட்ட ரீதியாக நடத்தப்படும். ஒரு மாவட்டத்தில் 10 அறநெறிப் பாடசாலைகளுக்கு மேல் இருந்தால் அந்த மாவட்டத்தில் இரண்டு நாட்கள் போட்டி நடத்தப்படும்.

உதாரணமாக 12 இருந்தால், முதன் நாளில் 12 (பன்னிரண்டு) அறநெறிப் பாடசாலைகளில் இருந்து 06 (ஆறு) அறநெறிப் பாடசாலைகள் தெரிவு செய்யப்படும்.

அதற்கு அடுத்த நாள் அந்த 06 (ஆறு) அறநெறிப் பாடசாலைகளும் மறுநாள் நடைபெறும் போட்டியில் பங்குபற்ற வேண்டும். அதில் இருந்து ஒரு அறநெறிப் பாடசாலை தெரிவு செய்யப்படும். இவ்வாறு ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் ஒவ்வொரு அறநெறிப் பாடசாலை இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படும்.

அனைத்து போட்டிகளிலும் நடுவர்கள் எடுக்கின்ற முடிவே இறுதி முடிவாக இருக்கும். இது தொடர்பாக எவரும் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடக்கூடாது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றுகின்றவர்கள் அனைவரும் அறநெறிப் பாடசாலைகளைச் சார்ந்தவர்கள் என்பதால் ஒழுக்கம் பேணுவீர்கள் என்று நம்புகின்றோம்.

போட்டிகளில் பங்குபற்றுகின்ற பிள்ளைகளை உற்சாகப் படுத்த வேண்டியதும் அவர்கள் தோல்வியுற்றால் பிள்ளைகள் முன் யாருடனும் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடாமல் இருக்க வேண்டியதும் ஆசிரியர்களதும் பெற்றோர்களதும் கடமையாகும். பிள்ளைகளது மனங்களை தளர விடாமல் நம்பிக்கை ஊட்டும் வார்த்தைகளையும் எண்ணங்களையும் எடுத் துக் கூற வேண்டும். வெற்றி தோல்வி சகஜம் என்பதை அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

இந்தப் போட்டி சம்பந்தமாக வட்ஸ்அப் குறூப் ஒன்று உள்ளது. அதில் உங்களது கருத்துக்களையும் உடனுக்குடன் அறியத்தரலாம். எழுத்து க்கள் டைப் பண்ண முடியாவிட்டால் குரல் பதிவு செய்து அனுப்பலாம்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கான ஆடற்கலைப் போட்டிகள் எதிர்வரும் 2023.11.18 மற்றும் 19 ஆம் திகதிகளில் கொழும்பில் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலதிக தகவல்கள் அறிய அகில கிராமிய கலைகள் ஒன்றியத்தின் தலைவர் எஸ். விஜேராஜ் (0775933919) அல்லது செயலாளர் கே. ஈஸ்வரலிங்கத்துடன் (0773124543) தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 55

அந்த கடவுளின் கிருபையை பெற, ஆதாரமாக இருப்பது ஆண்மை பொருந்திய உழைப்பு மட்டுமே. அனைத்தும் துறந்து ஆண்மையுடன் கூடிய உழைப்பை மேற்கொண்டவனுக்கு, கடவுள் அருள்வார் அல்ல அருளியே தீர வேண்டும். எனவே உழைப்பை பராமாத்மா விரும்புவார். உழைத்தவர் உயர்வார். உழைப்பது அவமானமல்ல. எவனொருவன் உழைப்பை நம்பி, திட்டமிட்டு, உறுதியுடன் செயல்படுகிறானோ, அவன் மஹான் எனப் போற்றப்படுவான். இப்படிப் பட்டவனைத் தான் இவ் உலகம் தேடுகிறது.

தகுதியுடையவனே வெகுமதி பெறுகிறான். இது ஒரு தெய்வ நெறியாகும். 'எந்த ஒரு கோட்பாடும் கடவுளால் உருவாக்கப்பட்டு அவராலே செயல் வடிவம் பெறும்' என்பதே இறைச் சட்டம். இதை கடவுளே பின்பற்றவும் செய்ய வேண்டும். அவ்வாறு அவர் பின்பற்றாமல் போனால் இந்த பிரபஞ்சம் செயல்பட முடியாது. ஒரு கோட்பாட்டை உருவாக்கிக் கொண்டு அதை அலட்சியப்படுத்துவதோ அல்லது மீறுவதோ மானமுள்ள செயலாகாது. படைப்பு என்னும் சக்கரம் கோட்பாடு என்னும் அச்சாணியின் உதவியால் தான் சுழன்று கொண்டிருக்கிறது. அந்த கோட்பாட்டை உருவாக்கிய கடவுளே அதனை மீற முடியாது. அப்படி மீறிவிட்டால் அந்த கோட்பாடு அர்த்தமற்று போகும்.

உழைப்பவனை உயர்த்த வேண்டும் என்பது கடவுளின் கோட்பாடு. அந்தக் கோட்பாட்டின்படி உழைப்பவன் அதற்குரிய ஊதியம் பெற்றடைவான். ஆண்மை பொருந்திய உழைப்பாளியை கைதூக்கி விடும் கட்டாயம் கடவுளுக்கு இருக்கிறது. கடவுளின் ஆதரவு உழைப்பவனுக்கு இருக்கும் பொருந்திய போது எந்த சக்தியும், அரசும் அதை தடுக்க முடியாது.ஆண்டவன் கட்டளைக்கு முன் அரச கட்டளை அடி பணியும்.

மனவலிமை இழப்பது அல்லது தாழ்வு மனப்பான்மை கொள்வது என்பது மனிதனுக்கு மனிதனே தேடிக் கொள்ளும் ஒரு சாபக்கேடாகும். சரீர பலமிருந்தும், வெற்றி பெறுவதற்கான சாதனங்கள் உள்ள போதும். தாழ்வு மனப்பான்மை கொண்டவன், மனவலிமை இல்லாதவன் வாழ்வில் வெற்றி பெற இயலாது. உடல் வலிமை இல்லாத போதும், மன வலிமை உள்ளவன் வெற்றி பெறுவதற்கான சாதனங்களை உருவாக்கிக் கொள்வான்.

ஏதோ சில காரணங்களினால், சில சூழ்நிலைகளில் ஒருவன் மன வலிமை இழந்து விட்டான் என்றால், அவன் அந்த சாபக்கேட்டிலிருந்து வெளிவர முடியாது என்றில்லை. முயற்சித்தால் முடியாதது ஒன்றுமில்லை. சூழ்நிலை காரணமாக மனவலிமை இழந்தவன், அதிலிருந்து மெல்ல மெல்ல விடுபட முயற்சிக்க வேண்டும். அதற்காக அவன் தன் உடல் சக்தி முழுமையையும் ஈடுபடுத்தி தன் ஆண்மையை நிலை நாட்ட வேண்டும். தோல்வியடைந்ததும் அவநம்பிக்கை கொள்ளாமல் மீண்டும் மீண்டும் முயற்சிக்க வேண்டும். நிதானமாக முயற்சிக்கும் போது மனவலிமையும், நற்தகுதிகளும் நிச்சயம் உருவாகும்.

மனிதனுக்கு மற்ற வலிமைகளை விடவும் மனவலிமையே போற்றுவதற்குரியதாகும். மனவலிமை மிகுந்தவனுக்கு சமுதாய ரீதியாக, பொருளாதார ரீதியாக, ஆன்மீக ரீதியாக அனைத்து துறைகளிலும் வெற்றி கிடைப்பது உறுதி. எனவே மன வலிமையை பெருக்கிக் கொள்ளும் முயற்சியில ஈடுபடவும்.

அறநெறி அறிவுநொடி

கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

(19862) 'ஆயுள்காரகன்' என்று அழைப்பது யாரை? சனிபகவானை

(19863) யாருடைய ஆதிக்கத்தை பொருத்து மனிதர்களின் ஆயுட்காலம் அமையும்? சனி பகவானுடைய

(19864) அந்த சனிபகவானை கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் யார்? பெருமாள்

(19865) 'சனி அதிபதி' என்று அழைப்பது யாரை? பெருமாளை

(19866) பெருமாளை வேறு எவ்வாறு அழைப்பார்கள்? 'சனி அதிபதி'

(19867) பெருமாளுக்கு உகந்த தினம் எது?
சனிக்கிழமை.

(19868) சனிக்கிழமை விரதமிருந்து பெருமாளை வழிபட்டால் என்ன நடக்கும்? நினைத்த காரியம் விரைவில் கைகூடும் என்பது ஐதீகம்.

(19869) சகல செல்வமும் பெற்று ஒருவர் வாழ வேண்டுமென்றால் என்ன செய்யலாம்? சனிக்கிழமை விரதத்தை கடைபிடிக்கலாம்.

(19870) முக்கியமாக சனி பகவான் கொடுக்கும் சங்கடத்திலிருந்து நம்மை காத்துக்கொள்ள என்ன செய்யலாம்? சனிக்கிழமை விரதமிருந்து பெருமாளை வழிபடுவது சிறப்பாகும்.

(19871) சனிக்கிழமை விரதம் எப்படி இருக்கவேண்டும்? பகல் முழுவதும் பழங்களையும் நீர் கலந்த பானத்தை மட்டும் சாப்பிட்டு மாலையில் பெருமாள் கோவிலுக்கு சென்று, நல்லெண்ணை தீபம் ஏற்றி, திருமாலை வழிபட்டு பின்பு இரவு உணவு உட்கொண்டு விரதத்தை முடிக்கலாம்.

(19872) சனிக்கிழமைகளில் பக்தர்கள் இன்னும் சில விஷயங்களை தவிர்க்க வேண்டும் என்று கூறப்படுகிறது அவை எவை? அவசர அவசிய காரணங்கள் இல்லாமல் மருத்துவமனைக்கு செல்வது. விதை விதைப்பது போன்ற விவசாயம் சம்பந்தமான காரியங்களை சனிக்கிழமை செய்வதை தவிர்க்கலாம். மங்களகரமான காரியங்களை சனிக்கிழமை செய்வதை கட்டாயமாகத் தவிர்க்க வேண்டும்.

(19873) சனிக்கிழமைகளில் எந்த காரியங்களை செய்யலாம்? வழக்கு சம்பந்தமான காரியங்கள், பிரச்சினைகளை பேசி முடிப்பதற்கான சந்தர்ப்பங்கள், சமாதானம் பேசுவதற்கான நாளாகவும் சனிக்கிழமைகளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

(19874) அரசியல் ரீதியாக வெற்றிகளை கொடுக்கக்கூடிய நாளாக எது இருக்கும்? சனிக்கிழமை

வரலாற்று சிறப்பு வாய்ந்த உடப்பு ஸ்ரீ வீரபத்திர காளியம்மன் ஆலயத்தின் வருடாந்த வேள்வி உற்சவத்தை முன்னிட்டு "கும்பம் பாலித்தல் "நிகழ்வு கடந்த (27) திகதி இடம்பெற்றது. இதன்போது பத்து நாட்களும் விளக்கேற்றுவதற்காக கடல் நீர் தோண்டி எடுத்தல், அத்துடன் வெள்ளிக்கிழமை (29) முதற் கரகம் இடம் பெற்றது. கரகத்தை பூசகர் குழந்தைவேல் சுரேந்திரன் சுமந்த வண்ணம் காவற்காரர்களுடன் ஆண்டிமுனை மாரியம்மன் ஆலயம் வரை சென்று வந்தார். இதில் பல பக்தர்கள் கலந்துகொண்டனர். உடப்பு குறூப் நிருபர்

பெரியவிளான் றோ.க.த.பாடசாலையில் திறன் வகுப்பறை திறந்து வைப்பு

வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளரின் கோரிக்கைக்க மைவாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பு(IMHOUSA) மற்றும் இரட்ணம் பவுண்டேசன்(Ratnam FoundationUK) அமைப்புக்களினால் முதலாம் கட்டத்தில் பன்னிரண்டு பாடசாலைகளிலும் இரண்டாம் கட்டத்தில் ஒன்பது பாடசாலைகளிலும் திறன் பலகையுடனான திறன் வகுப்பறைகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுகள் நடந்தேறி வருகின்றன. இவற்றில் இரண்டாம் கட்டத்தில் வழங்கப்பட்ட ஒன்பது பாடசாலைகளில் ஒன்றான பெரியவிளான் றோ.க.த.பாடசாலையில் திறன் வகுப்பறையை திறந்து வைக்கும் நிகழ்வு சென்ற வாரம் மிகச்சிறப்பாக நடைபெற்றிருந்தது.

இந்நிகழ்வில் திறன்பலகை தொடர்பாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களினால் , மாணவர்களுடனான பங்குபற்றுதலுடன் வகுப்பறைச் செயற்பாடுகள் மிகவினைத்திறனான முறையில் நிகழ்த்தி காட்டப்பட்டிருந்தது. e class, white board,g compries மென்பொருட்களுடன் e thksalawa,NIE,DP போன்ற வலய அமைப்புக்களை பயன்படுத்தியது மட்டுமன்றி செயற்கைநுண்ணறிவு தொடர்பாக பயிற்சியின்போது வழங்கப்பட நுட்ப விடயங்களையும் தமது வகுப்பறைச் செயற்பாடுகளில் இவ் ஆசிரியர்கள் இணைத்திருப்பது இப்பாடசாலையில் பயிலும் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். இவ் ஆரம்ப நிகழ்வுகளில் வலயபிரதிநிதிகளுடன், பழைய மாணவர்கள்,பெற்றோர்கள் கலந்து கொண்டதுடன் IMHOUSA அமைப்பின் வதிவிட பணிப்பாளர் திரு.சு. கிருஷ்ணகுமார் அவர்களும் கலந்து கொண்டு ஆசிரியர்களை நெறிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

வடக்கின் உதயம்

முருங்கனில் சுமார் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் முருங்கன் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் இராணுவ புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக மன்னார் முருங்கன் பகுதியில் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த பாரிய ஐஸ் போதைப்பொருள் கடத்தல் வெற்றிகரமாக சுற்றிவளைக்கப்பட்டு முறியடிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் குற்ற புலனாய்வு பிரிவினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 25 இலட்சம் ரூபா பெறுமதியான 178.75 கிராம் நிறை கொண்ட ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

வட்டக்கச்சி வினோத்தின் 'வேர்கள் வான் நோக்கின்' கவிதை நூல் வெளியீட்டுவிழா

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் வசிக்கும் வினோத்தின் "வேர்கள் வான் நோக்கின்" கவிதை நூல்வெளியீட்டு விழா நிகழ்வு கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நூலின் முதல் பிரதியினை வெளியிட்டுவைத்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் முதல்வர் பூலோகராஜா, பிரதேசசபை முன்னால் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

மலைச்சாரலி

குளவிகள் கொட்டு காரணமாக ஏழு பெண் தொழிலாளர்கள் பாதிப்பு

அக்குறணை குறூப் நிருபர்

தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்களை குளவிகள் கொட்டியதில் ஏழு பெண்கள் பாதிப்படைந்தனர்.

கொட்டகலை, கிரேக்லி தோட்டத்தில் அண்மையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட 7 பெண்கள் கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக திம்புள்ள, பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். தேயிலைத் தோட்டங்களில் அடிக்கடி இவ்வாறான சம்பவங்கள் ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தேயிலைச் செடிகளுக்கு கீழ் குளவிக் கூடுகள் காணப்படுவதும் முக்கிய காரணமாக உள்ளது.

மலையகத்தில் அடை மழை

ஊவா சுழற்சி நிருபர்

அண்மைக் காலமாக மலையகத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக நீரேந்து நிலையங்கள், குளங்கள், ஏரிகள், நீர் வீழ்ச்சிகள் நிரம்பி பெருக்கெடுத்துள்ளன.

நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டவுள்ள அதேவேளை ஊவா மாகாணத்திலுள்ள நீர் வீழ்ச்சிகளான ராவண எல்ல நீர்வீழ்ச்சி, கொஸ்லந்தைப் பிரதேசத்திலுள்ள தியலும நீர் வீழ்ச்சி.

ஹல்துமுல்ல பிரதேசத்திலுள்ள பம்பரகந்த நீர் வீழ்ச்சி, பதுளை மீகாகஹகுயில பிரதேசத்திலுள்ள துல்ஹிந்த போன்ற நீர் வீழ்ச்சிகள் பெருக்கெடுத்து ஓடுவதால் இதனை பார்வையிடச் செல்லும் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாச பிரயாணிகளுக்கு மாத்திரமன்றி அருகில் வசிப்போருக்கும் அருகில் செல்வது, நீராடுவது போன்றவைகளைத் தவிர்க்குமாறு பொலிஸார் மற்றும் இடர் முகாமைத்துவ மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பலாங்கொடை- பொகவந்தலாவ வீதிகளில் அதிக அளவு பனிமூட்டம்

பலாங்கொடை தினகரன் நிருபர்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பலாங்கொடைஹப்புதலை மற்றும் பலாங்கொடை பொகவந்தலாவ வீதிகளில் அதிக அளவு பனிமூட்டம் படர்ந்து காணப்படுகிறது.ஆகவே வாகன போக்குவரத்து செய்யும் போது மிகுந்த அவதானத்துடன் இப்பாதைகளில் செயல்படுமாறு போக்குவரத்து பொலிசார் சாரதிகளை எச்சரித்துள்ளனர். இவ் வீதிகளில் பயணிக்கும் சாரதிகளை அறிவுறுத்தி உள்ள பொலிசார் வாகன மின்விளக்குகளை ஒளிரவிட்டவாறு பயணிக்குமாறும் தெரிவித்துள்ளனர். பலாங்கொடை ஹப்புதலை மற்றும் பலாங்கொடை பொகவந்தலாவ வீதிகளில் கடும் மழை காரணமாக வழுக்கும் தன்மை கொண்டிருப்பதுடன் வீதிகளின் இரு பக்கங்களிலும் பள்ளத்தாக்குகள் காணப்படுவதால் இவ்விதங்களில் வாகன சாரதிகள் இரட்டிப்பு அவதானத்துடன் வாகனங்களை செலுத்த வேண்டும் எனவும் போக்குவரத்து பொலிசார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காலமானார்

தலவாக்கலை குறூப் நிருபர்

